மகாத்மாஜீ

உபதேச மலர்.

ஊழியன் :

மூ. பெருமாள் தொகுத்தவை.

1949.

பிரசுரிப்பவர் :

N. K. பாணி & பிரதர்ஸ்,

புஸ்தகம் & ஸ்டேஷனரி வியாபாரம்,

நெ. 60, லாங்குபஜார், வேலூர். (N. A. Dt.)

விலை ரூபா 1 0 0.

சென்னை மாகாண
கல்வி அமைச்சர்
அவர்கள்.

Minister For Education
Fort St. George,
Madras.

வாழ்த்துரை.

மகாத்மாஜியின் உபதேசங்கள் எத்தனை வகைகளில் தொகுக்கப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டாலும், அவை மக்களுக்கு நன்மை பயக்கும். இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி, நாம் நம் தினசரி வாழ்க்கையில் அவர் உபதேசங்களைப் பின்பற்றுவதைப் பொறுத்திருக்கிறது. இந்த சிறு தொகுதி அதற்குப் பயன் படுமென்று நம்புகிறேன்.

11—1—49,
சென்னை.

அவிநாசிலிங்கம்.

காந்தியம் வாழ்க ! இந்தியா வாழ்க !!

மகாத்மாவும், மேல்நாட்டு மேதாவிகளும்.

தங்கள் நாடு தலைதூக்கி நின்று தேசங்கள் யாவையும் அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம் தொன்று தொட்டே ஆட்சித் தலைவர்களிடமுண்டு. அதன் காரணமாகத் தேசங்களுக்கிடையே போர்களை மூட்டி தங்கள் ஆட்சித் தலைமை ஸ்தானத்தைக் காப்பாற்றி வருகின்றார்கள் என்பதை உலக சரித்திரம் உணர்த்துகின்றது. ஆனால் அவர்களுடைய கௌரவத்தையும், மண்ணாசை, பொன்னாசையையும் பூர்த்தி செய்ய உலகத்திலுள்ள எத்தனை கோடி மக்கள் தங்கள் ரத்தத்தையும், உயிரையும் இழந்து மடிகிறார்கள் என்று எந்த அரசியல் தலைவராவது எண்ணிப் பார்க்கின்றார்களா ? ஒருவருமில்லை.

அதே போல் இந்த இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் பிடிவாதக்கார அரசியல் தலைவர்களின் பேராசையால் முதல் மகாயுத்தம் தோன்றியது. அதன் தொடர்ச்சியாக சமீபத்தில் இரண்டாவது மகாயுத்தத்தை நடத்தினார்கள் ஐரோப்பாக் கண்டங்கள் யாவும் அணிவகுத்து நின்றன. அச்சமயம் தற்கால நாகரீகத்துக்கு தலைமைத் தாங்கி நிற்பதும், போரிலும், புரட்சியிலும், பெரும்புகழ் பெற்றதுமான பிரஞ்சு தேசத்தின் பெருமையை பெடெய்ன் என்ற தலைவர் காத்து நின்றார். சூரிய அஸ்தமனமே இல்லாத அளவுக்கு விரிந்துகிடந்த பிரிட்டிஷ் இம்பீரியலிஸத்தின் பெருமையை சூழ்ச்சியில் மிக்க சர்ச்சில் சலியாமல் காத்து நின்றார். குவலய மனைத்தும் குபேரப் பட்டினமெனக் கொண்டாடும் அமெரிக்

காவின் ஜனநாயகத்தைக்குன்றுது காத்துநின்றுர் ரூஸ்வெல்ட் விஞ்ஞான வளர்ச்சியைக் கொண்டு விந்தையான போர்க் கருவிகளை உற்பத்தி செய்து ஜெர்மெனியின் நாஸிஸத்தைக் காத்து நின்றுர் ஹிட்லர். மேன்மை மிக்க ரோமாபுரியில் பாஸிஸத்தை நிறுவிக்காத்து நின்றுர் முஸோலினி. ஜெக மனைத்தும் சமதர்மம் நிலவேண்டுமென்ற ரஷ்யாவின் கம்யூனி ஸத்தைக் காத்து நின்றுர் ஸ்டாலின். ஆசியாக் கண்டத்தின் உயிர் நிலை போன்ற இந்தியாவின் உயர்ந்த லக்ஷியங்களை அகிம்சா தத்துவத்தின் மூலம் காத்து நின்றுர் காந்திஜி

மேற்கண்ட தேச அரசியல் தலைவர்களும் தங்கள் தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகத் தொண்டாற்றினுர்கள். காந்தி ஜியும் தன் தாய் நாட்டுச் சுதந்திரத்திற்காகத் தான் போராடி ஞர். ஆனுல் அவர்களுடைய குணம் கோபம். இவருடைய குணம் சாந்தம். அவர்களுடைய கொள்கை, பலாத்காரம். இவருடைய கொள்கை சத்தியாக்கிரகம். அவர்களுடைய ஆயுதங்கள் கத்தி, துப்பாக்கி ஆகாய விமானம். சப்மரின், விஷவாயுக்குண்டு, அணுக்குண்டு போன்ற விஞ்ஞான விபரீத ஆயுதங்கள் மக்களை மாக்களாக்கி மடியவைக்கும். இவ ருடைய ஆயுதங்களோ ஒரு உயிரையும் ஒழிக்காத துன்புறுத் தாத சத்தியம், சாத்மீகம் அன்பு, சேவை, தன்னலத்தியாகம் முதலான தீமையற்ற ஆயுதங்களாகும். அவர்கள் தேச அதி காரம், உலக ஆதிக்கம் தங்களுக்கு வேண்டு மென்கின்றுர்கள். இவர் தேச அதிகாரம் தேச மக்கள் கைக்கு மாற வேண்டு மென்கிறுர். அவர்கள் தங்கள் தேசத்துக்கு மற்ற தேசத்தை அடிமைப் படுத்த முயற்சிக்கின்றுர்கள். இவர் ஒரு தேசத் துக்கு மற்றெரு தேசம் அடிமையாகக் கூடாது. சுரண்ட லின்றிச் சுதந்திரமாய் வாழ வேண்டுமென்றுர். அவர்கள் அணுக்குண்டு போன்ற இரக்கமற்ற அநியாய யுத்த முறை

களைக் கையாண்டேனும் பலன் அப்பொழுதே வேண்டு மென்றார்கள். இவர் நியாயமான முறைகளை மேற்கொண்டு நீண்ட நாளானாலும் உழைத்து நீடித்தப் பலன் வேண்டு மென்றார்.

அவர்கள் யுத்தத்தை அடிக்கடி விரும்பி மேற் கொள்ளுகின்றார்கள். இவர் யுத்த மனப்பான்மை அடியோடு அகல வேண்டுமென்றார். அவர்கள் வீண்கௌரவத்தையும், டம்பத்தையும், இறுமாப்பையும் விடாப்பிடியாகப் பற்றி நிற்கின்றார்கள். இவர் அடக்கமும், அன்பும், ஆடம்பர மில்லாமையும் பற்றி நின்றார். அவர்கள் லௌகிகவாதிகள். இவர் பற்றற்ற லௌகிகப், பாரமார்த்திக வாதி. அவர்கள் வெறும் அரசியல் வாதிகள். இவர் ஆத்மீக அரசியல் வாதி.

ஆக இத்தனை விதமான வேற்றுமைகள் நிறைந்த மேல் நாட்டு அரசியல் தலைவர்களுடைய விவேக மற்ற செய்கை யால், இரண்டாவது யுத்தம் மூண்டு இன்றைய உலக மக்க ளிடையே பொருளற்ற, விளைவற்ற, தொழிலற்ற, போக்கு வரவற்ற நிலையேற்பட்டது. உணவு, உடை முதலான முக்கிய மனிதத் தேவைகள் முடக்கப்பட்டு எண்ணற்ற துன்பம் அடைய நேர்ந்து விட்டது. காந்திஜியின் கொள்கைகளைக் கையாண்டிருந்தால் யுத்தம் ஏற்பட வேண்டிய பிரமேயம் எந்த நாட்டுக்கும் ஏற்பட்டிருக்காது. காலனிப் பிரச்சினை களையும், மற்ற சிக்கல்களையும், நேசமனப்பான்மையில் சுமுகமாகத் தீர்க்கப் பட்டிருக்கலாம். இன்று உலகம் எங்கும் அமைதியும், அன்பும், சுபீட்சமும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும்.

உலக சரித்திரங்களைப் புரட்டிப்பாருங்கள் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எண்ணற்ற மன்னர்கள் ஏற்கனவே பன்முறை பலாத்கார யுத்தமுறைகளை மேற்கொண்டு பலனில்லா தொழிந்தனர். அவர்களால் உலகத்தில் அமைதியை நிலை நாட்ட முடியவில்லை என்று சரித்திரம் சொல்லக்கேட்டும் சண்டை மனப்பான்மை இன்னும் சாய்ந்தபாடில்லை. ஆகவே உலக அரசியலின் யுத்த நோய்க்குக் காந்தியம் தான் கைகண்ட மருந்து.

காந்தியத் தத்துவம்.

உலகத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் உலகப் பிரசித்திபெற்ற அரசியல் மேதாவிகளும், மகான்களும், தோன்றி உலக மக்களின் உண்மை ஒழுக்கத்தை வளர்த்து வளம்பெற வாழ்ந்து காட்டி மறைந்தார்கள். இது தொன்று தொட்டுத் தொடர்ந்து நிகழ்ந்து வரும் ஒரு தூய்மைச் செயலாகும். இதற்குக் கீதை வாக்கே போதிய சாக்ஷி.

தத்துவக் கர்த்தாக்கள் தோன்றி மறையலாம். ஆனால் அவர்களின் உண்மைத் தத்துவங்கள் ஒருபோதும் மறையாது சில தத்துவங்கள் ஒரு காலத்தில் சிலாக்கியமாக ஓங்கலாம். சில காலத்துக்குப் பின் அவைகள் மங்கலாம். ஒரு தத்துவம் ஓங்குவதும் மங்குவதும் அவைகளின் உண்மையிலும் அதை நம்பிப் பின்பற்றும் மக்கள் செயலிலும் அடங்கியிருக்கின்றது. உண்மையான தத்துவத்தின் உன்னதமான லக்ஷியம் என்றும் அழியாது உயர்ந்தே நிற்கும். மக்களுடைய செயல், மனம், நம்பிக்கை வேண்டுமானால் மங்கலாம், மாறலாம், மறையலாம். ஆனால் அது மக்களுடைய குறைபாடே யொழிய. அத்தத்துவங்களின் குறைபாடல்ல.

உயர்ந்த தத்துவங்களையும், லக்ஷியங்களையும், அனுஷ்டிக்கத் தவறுவதால் உலக மக்களுக்கு நஷ்டமே யொழிய அத்தத்துவக்கர்த்தாக்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. உண்மையானத் தத்துவங்கள் ஆரம்பத்தில் அல்லது எளிதில் பலன் கொடுக்காது. அடுத்து முயன்ற உழைப்பால் தான் அசைக்க முடியாத ஆழ்ந்த நற்பயன்களைப் பெற முடியும். அதற்கு வேண்டியது பொறுமையும், நம்பிக்கையும், விடா முயற்சியும் தான். இதற்குக் கடந்த கால மக்களும், சரித்திரங்களுமே உபமான உபமேய உறைகல்லாக நிற்கின்றார்கள் என்பதை அன்பர்கள் உற்று நோக்கினால் உணரலாம்.

காந்திஜியவர்கள் தன் தத்துவங்களை ஆழ்ந்து அறிந்து செயலில் தெளிந்த பின், உண்மை ஒழுக்க நெறிகளை உலக மக்களுக்குப் பிரார்த்தனை மூலம் போதித்தார். தனக்கும் எதிரிக்கும் தீமைப் பயக்காது அமைதிக்கும், அன்பு நெறிக்கும் வழி கோலுவது காந்தியம் தான் காந்தியத்தால் இந்தத் தேசம் கண்விழிப்புற்றது. காந்தியத்தால் இத்தேச மக்கள் அச்சம் தீர்ந்து ஆண்மையுற்றனர். காந்தியத்தால் இத்தேசக் கிராமக் கைத்தொழில்கள் புனருத்தாரண மடைந்தன. காந்தியத்தால் தேசியக் கல்வி புத்துயிர் பெற்றது. காந்தியத்தால் இத்தேசப் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடி கோலப் பட்டது. காந்தியத்தால் இத்தேசத்தில் சமூக சீர்திருத்த மனப்பான்மை மூண்டு வருகின்றது. காந்தியத்தால் இந்து மதத்தின் தீராத மாசானத் தீண்டாமைத் தொலைக்கப்பட்டது. காந்தியத்தால் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிமுனை வரையிலுள்ள இந்நாட்டு மக்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு நின்று தேசப் பணியாற்றி வெற்றியடைய முடிந்தது. காந்தியத்தால் ஆயுதப் பலமுள்ள அன்னிய அரசை அடியோடு விரட்ட அன்பு, அகிம்சை

என்ற சத்திய ஆயுதத்தை இன்று இந்தியா கற்றுள்ளது. காந்தியத்தால் தான் அன்னிய அரசாங்கம் ஆட்டம் கொண்டு ஓட்டம் பெற்றது. காந்தியத்தால் தான் பெரியப் பிரபுக்களும் தேசத்துக்குத் தொண்டாற்ற முன் வந்தார்கள் இன்று இந் நாட்டில் அரசியல், மதம், சமூகம், கலை, நாகரீகம் ஆகிய வற்றில் புரட்சி யேற்பட்டு உலக மக்கள் முன்னே நம் நாடு கௌரவிக்கப்பட்டு வருவது காந்தியத்தால் தான் காந்தியத் தால் நாம் யாவரும் காந்தியடைந்தோம்.

இவ்விதமாக இந்த இருபதாம் நூற்றாண்டில் இந்தியா வின் மறு மலர்ச்சிக்கு காந்தியம் ஒரு இணையற்ற சஞ்சீவி யாக அமைந்தது நாம் அனைவரும் செய்த பெரும் பாக்கிய மாகும். காந்திஜி இந்த உலகத்தின் உயரிய தர்மச் சின்ன மாவார். இந்தியாவின் கடந்த இருநூறு ஆண்டுகளின் அடிமையும், அவமானமும் நிறைந்த சரித்திரத்தை அழித்து, வருங்காலச் சரித்திர ஆசிரியர்கள் வாழ்த்தி எழுதும் பெருமை இந்தியாவுக்கு ஏற்பட்டதென்றால் அது காந்திஜியால் தான்.

மக்களை மயக்கிய மகான்.

காந்திஜி வேதம் வாசித்த விற்பன்னரல்ல ஆனால் அவர் வாக்கிலிருந்து வேத உபநிஷத்துக்களின் சாரங்கள் வெளியாகி யுள்ளது காந்திஜி கல்வியில் கரை கண்டவரல்ல. ஆனால் அவர் அறிக்கையில் கல்வி மணம் கமழ்கின்றது காந்திஜி காவியம் ஓவியம் கற்றவரல்ல. ஆனால் அவர் பேச்சில் கவியும், எழுத்து நடையில் ஓவியமும் கலந்து வீசுகின்றது. காந்திஜி வைத்தியப் பரீக்ஷையில் தேர்ந்துப் பட்டம் பெற்றவரல்ல; ஆனால் சிறந்த உடற் சிகிச்சை முறையைச் சிறப்பாக அவர் செப்பியுள்ளார். காந்திஜி மாந்த்ரீகரல்ல; ஆனால் அவருடன்

பேசுபவர்கள் கவர்ச்சியுற்று கட்டுண்டு விடுகின்றார்கள். காந்திஜி மனோ தத்துவ மேதாவியல்ல. ஆனால் அவர் முக்கால முணர்ந்துப் பேசினார். அவர் அழகு நிறைந்த அங்கம் படைத்தவரல்ல. ஆடிக காற்றில் ஓடி ஒளிக்கும் உடல் படைத்தவர். ஆனால் அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவர் தரிசனம் காண, மக்கள் இரவு, பகல், குளிர், வெயில், மழை, பனி, எதையும் பொருட் படுத்தாது காத்திருந்து கண்டு களித்தார்கள். அவர் முத்துப் போன்ற பற்கள் நிறைந்த மோகனச் சிரிப்புடையவரல்ல, ஆனால் அவருடையப் பல்லிழந்த பொக்கை வாய்ச் சிரிப்பைக் கண்டு இப்பூவுலகில் மயங்காதவர்களில்லை. சர்ச்சில் துரையும், வெலிங்டெனும் காந்திஜியின் பொக்கை வாய்ச் சிரிப்பைக் கண்டால் மயங்கி விட நேர்ந்துவிடும் என்று தான் காந்திஜியைக் காண மறுத்தார்கள். அவருடையக் கருணை நிறைந்த உள்ளமும், குளிர்ந்த அன்புடையக் கண்ணொளித் தோற்றமும் மானில மக்கள் யாவரையும் மயங்கச் செய்யும் ஆற்றலுடையது.

பொருளுடையோரைச் செயலிலும்
வீரரைப் போர்க் களத்தும்
தெருளுடையோரை முகத்திலும்
தேர்ந்துத் தெளிவது போல்
அருளுடை யோரை தவத்தில்
குணத்தில் அன்பில், அருளில்,
இருளறு சொல்லினும் காணத்தகும்
இறைவா கச்சியே கம்பனே.

என்று பற்றறத்துறந்தப் பட்டினத்துப் பெரியார் பகர்ந்த பேருரைப்படி, சேவாக்கிராம முனிவள்ளலை அவருடைய சீரியச் செயல், பேச்சுகளிலிருந்து நாம் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். அவர் அன்பின், அருளின், சத்தியத்தின் அவதாரிகை ஆவார்.

அவர் மக்களில் மாணிக்கம் போன்றவர். அவர் மேதை யிலும் மேதை. அவர் மகான்களின் மகான். அழிந்து கிடக்கும் தர்மத்தை உயிர்ப்பிக்கவும், இழந்துக் கிடந்த சுதந்திரத்தை மீட்கவும், மறைந்து வரும் மக்கள் தர்மத்தை மலரச் செய்யவும், இப்புண்ணிய மண்ணிடை நண்ணினர் அவர். அவர் சத்தியத்தைக் காப்பதில் அரிச்சந்திரரையும், ஏகபத்தினி விரதத்தில் ஸ்ரீ ராமரையும், வைராக்கியத்தில் பீஷ்மரையும், வீரத்தில் விஜயனையும், கனிந்த பக்தியில் கண்ணப்பரையும், போதிப்பதில் கண்ணபிரானையும், கருணை யில் புத்தரையும், மன்னிப்பதில் ஏசுநாதரையும், பிரயத் தினத்தில் பகீதரனையும், சேனையை அணிவகுத்து அழைத்துச் செல்வதில் நெப்போலியனையும், பிரசாரம் செய்வதில் சாக்ர டீஸையும் ஒத்திருந்தார். எண்ணற்ற புகழுக்கிலக்கான அண்ணல் காந்திஜியை எவ்வளவுப் புகழ்ந்தாலும் அது மிகை யாகாது என்பது என் உள்ளத் துணியாகும்.

இதை வரையும்போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. எனது ஒண்ணரை வயதுக் குழந்தை தனது மழலைச் சொல்லால் காத்தி ஜே என்று எதிரிலிருக்கும் காந்தியடிகள் படத்தை எனக்குச் சுட்டிக்காட்டிக் குதிப்பதைக் கண்ட என் உள்ளம் மலர்ந்து என்னை அன்பினால் மூழ்கச் செய்துவிட்டது. பால் மணம் ஆராத சிசுக்களெல்லாம் சேவாக்கிராம முனிவருக்குச் ஜே போட்டு வாழ்த்தும் ரகசியம் தான் என்னவோ?

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். (குறள்)

என்ற வாலறிஞப் பெருந்தகை வள்ளுவனார் வாக்கு அந்த ரகசியத்துக்கு உறை சொல்லுவதுபோல் என் மன துக்கு ஞாபகம் வந்தன. அவர் அவதரித்த இந்த நாட்டில்,

நான் பிறக்க நேர்ந்ததும், அவருடைய ஜீவிதக் காலத்தில் மனித உடல் தாங்கி நான் ஜீவிக்க நேர்ந்ததும் பல பிறவிகளில் செய்த புண்ணியம் பலித்தது என எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அதிலும் அவருடையக் கொள்கையில் அணுவளவில் அணுவேனும் நம்பிக்கை வைத்து மேற்கொள்ளும் புத்தியை எனக்களித்த எனது வழிபடு தெய்வமான திருமுருகப் பெருமானுக்கு நன்றி யறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். காந்தியைக் கருதும்போது மனம் சாந்தியைப் பெறுகின்றது.

அவதார வடிவம் அணைந்தது.

இந்நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கியேத் தீருவேன் என்று சபர்மதி தீரத்தில் சபதம்பூண்டுப் புறப்பட்டார் 1930-ல் எண்ணியபடி 1947-ல் இந்நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார். காந்திஜி எல்லா இடங்களிலும் இறைவனைக் காண்பவர். எல்லார் உள்ளத்திலும் அன்பைக் காண்பவர். பேதமற்றப் பெருந்தகையார். தான் கண்ட லக்ஷியங்களை நமது சுதந்திர சர்க்கார் மூலம் நிறைவேற்ற நினைத்தார். ஏற்கனவே இருந்த அன்னிய அரசாங்கத்தால் அழுத்தமாக ஆக்கப்பட்ட இந்து முஸ்லீம் வேற்றுமையை முதலில் ஒழிக்க விரதம் பூண்டார். வகுப்பு வெறியர்கள் சிலர் வெகுண்டு தங்கள் வெறுப்பைக் குண்டுகள் மூலம் காட்ட முற்பட்டனர். இவர்களது வெகுளித்தனமானச் செயலைக் கண்டு காந்திஜி அவர்கள் "இந்து தர்மத்தையும், மதத்தையும் அழியாது காக்கக் கடவுள் தற்போது ஒருவரை உலகத்தில் அனுப்பி இருப்பாரானால் அது நானாகத் தான் இருக்க வேண்டும் என்பதை நம்புங்கள்," என்று வெள்ளை மொழியில் உள்ளமுருகச் சொன்னார். காந்திஜியின் கருத்

தறியாக் காதகர்கள் இந்து மதத்தைத் தங்கள் தலைமீது சுமப்ப தாகக் கருதி சூழ்ச்சி செய்தார்கள். மேன்மை மிக்க மக ராஷ்டிர தேசத்தின் மகிமையையும், வீரமிக்க வெற்றிக்கொடி தாங்கிய வீரச்சிம்மம் சிவாஜியின் புகழையும், தீரமிக்கத் தேசத்தலைவரும், "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்ற தாரக நாமத்தைத் தோற்றுவித்தவருமான திலகர் பெரு மானின் தளராதப் பெருமையையும் அழிக்க வந்த மக ராஷ்டிரத்து மாசு போன்ற ஒருவன் (அவன் பெயரை வரை வதும் பாபம்) கடந்த 30—1—1948 வெள்ளியன்று மாலை நேரத்தில் பிரார்த்தனைத் துடக்க விருந்தப் போது காந்திஜி யின் பூத உடலைக் குண்டுகளால் மாய்த்தான்.

காதகன் காந்தி அவர்களையா மாய்த்தான்? நுனி மரத்தில் ஏறி அடிமரத்தை அறுத்து விழ்த்தியதுப் போல் இந்து மதத்தைக் காப்பதாக எண்ணி இந்து தர்மத்தையும், இந்து தர்ம ரக்ஷகரையு மல்லவா மாய்த்தான். இன்று வீரச் சிவாஜியும், தீரத்தலைவர் திலகரும், கோகலேஜியும் உயிரோடு இருந்திருப்பார்களாயின் நீண்ட துன்பத்தில் மூழ்கியிருப் பார்கள்.

காந்திஜி உயிர் நீத்தார் என்றச் செய்தியானது, பரமேஸ் வரர் மீது பட்டப் பாண்டியன் பிரம்படியானது பாருலக ஜீவ கோடிகள் யாவற்றிலும் படிந்துத் தாக்கியது போல், உலக மக்களின் உயிரைத் துன்பத்தால் ஊசலாடவைத்து விட்டது. ஒவ்வொரு குடும்பமும் உணவுகூட சமைக்காமல் பிரேத அடக்கச் செய்தி கேட்கும் வரைப் பட்டினிக் கிடந்தார்கள். மன்னுதி மன்னர்களும் அந்த மகானின் பிரேத அஸ்திச் சாம்பலுக்குத் தங்கள் மணிமகுடம் சாய்த்து வணங்கித் துக்கித்தார்கள். புத்திர சோகத்தால், புருஷ சோகத்தால், உயிர் நீத்தச் செய்தி தான் இது காறும் உலகம் கண்டும்

கேட்டுமிருக்கின்றது. மகான் சோகத்தால் மாண்டார் என்றச் செய்தி மானிலம் கேட்டறியாப் புதுமையாகும். இது வரையில் தோன்றி மறைந்த மகான்களுக்கும் ஏற்பட்டிராத உலகம் யாவும் ஒருமித்த அனுதாபம் காந்திஜிக்குத் தான் வாய்த்தது. அது சமயம் உலக மக்கள் அடைந்த உள்ளத் துயரை வருங்காலச் சரித்திர ஆசிரியர்கள் எப்படி வர்ணிப் பார்களோ தெரியவில்லை. காவியத்தால் வரைந்துக் காட்ட கம்பருமில்லை. ஓவியத்தால் சித்தரிக்க ரவிவர்மாவுமில்லை. அத்தனைச் சிறப்பு வாய்ந்த உத்தமரை இழந்து இன்று அனாதையாக நாம் வாழ நேர்ந்துவிட்டது. ஆனால் காந்திஜி யின் பூத உடல் கொல்லப்பட்டனவே ஒழிய, காந்தியம் கொல்லப் படவில்லை. கொல்லவும் முடியாது. எனவே அன்பர்களாகிய நாம் அனைவரும் காந்தியத்தை இயன்ற வரைக் கையாண்டு தேசத்தின் பெருமையை நிலைநாட்ட முற்பட வேண்டுவது அவசியமாகும்.

காந்தியம் எவ்வளவு தூரம் பின்பற்றப் படுகிறதோ அது வரை உலகத்தில் அன்பும் அறமும், நிரந்தர சமாதானமும் நிலவி நிற்கும். இந்தத் தேசமும் சுதந்திரமும் சுபீக்ஷமாக வாழவேண்டுமானால் இந்தத் தேசம் கொடிய யுத்தங்களாலோ அல்லது பிற நாட்டு பலாத்கார வாதிகளாலோ கைப்பற்று திருக்கப்பட வேண்டுமானால், இந்தத்தேச அரசியல், மதம், சமூகம், கலை நாகரீகம், கைத்தொழில், பொருளாதாரங்கள் முதலானவைகள் பாதிக்கப் படாதிருக்கவேண்டுமானல், அது காந்தியம் ஒன்றால்தான் சாத்தியப்படும்.

மற்றப் பலாத்கார, சர்வாதிகார: ஆயுதப் போராட்ட முறைகளெல்லாம் ஏற்கனவே கையாண்டு பழசுப்பட்டுக் காலாவதியான பயனற்ற முறைகள் என்பதை உலக அனு

பவம் நமக்கு அறிவிக்கின்றது. எனவே இந்நாட்டுக்கும் சரி மற்ற நாட்டுக்கும் சரி காந்தியம் தான் நன்மையளிக்கும். இந்த நாட்டின் மேன்மைக்காக தன் ஒவ்வொரு நிமிடத்தையும், மூச்சையும், பேச்சையும், செயலையும், சிலவழித்து அனுபவ சாத்தியத்தில் கண்டறிந்த லக்ஷியங்களை அரசியல் ஆன்மீகத்துறையில் நாம் கையாண்டு மேன்மை யடைய வேண்டியதற்காகத்தம் உபதேசங்களை அப்போதைக்கப்போது காந்திஜி கட்டுரைகள் மூலம் வரைந்து வந்துள்ளார். அப்பொன் மொழிகள் நம்முடையவும், நம் பிற்காலச்சந்ததிகளுடையவும் சிறந்தப் பொக்கிஷங்களாக நாம் போற்றி கவனித்துக் காக்க வேண்டியிருப்பதால் அவருடைய ஆத்மா சாந்தியடைந்த முதலாவது ஆண்டுச் சிரார்த்தம் பூர்த்தியாகும் இந்நன்னாளின் ஞாபக மலராகத் தொடுத்து அவரது பாத காணிக்கையாகச் சமர்ப்பிக்க முயன்றுள்ளேன்.

அவர் பூவுலகில் 78 ஆண்டுகள் பூர்த்திப் பெற வாழ்ந்ததால் அவரது உபதேசங்களை 78 தலைப்பாகத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு தலைப்புக்கும் பத்து குறிப்புகள் வீதம் திரட்டி வரையப்பட்டுள்ளது சிலத் தலைப்புகளுக்கு வேண்டியக் குறிப்புகள் கிடைக்காமையால் கிடைத்தவரையில் வரையப்பட்டுளது. காந்திஜியின் அறிக்கைகள் வரும் பழையத் தமிழ் பத்திரிக்கைகளிலிருந்தும், புஸ்தகங்களிலிருந்தும் கடந்தப் பத்து ஆண்டுகளாகத் தேனீயைப்போல் திரட்டி வைத்திருந்தேன். ஆனால் தேனியைப் போல் திறமையாகத் தேர்ந்தெடுக்கும் தன்மை என் பாலில்லை யெனினும் அன்பர்கள் எனது முயற்சிக்கு அன்பு கூர்ந்து ஆசீர்வதித்து ஆதரிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கின்றேன்.

காந்தி என்றால் யார்? காந்தியம் என்றால் என்ன? நம் அரசியல், மதம், சமூகம், கலை நாகரீகம், கைத்தொழில்

போன்றவைகளைக் குறித்து அவர் கருத்து என்ன? அவருடையக் கொள்கை என்ன? என்பதை அறிய விரும்பும் தற்கால பிற்கால மக்களுக்கு இந்நூல் ஒரு சிறந்தத் துணையாகும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு அன்பு கூர்ந்து தனது அமைச்சர் பணிகள் மிகுந்திருந்தும் சிரமம் பாராது வாழ்த்துரை வரைந்துக் கொடுத்த காந்தியப் பக்தரான உயர்திரு செந்தமிழ்ச்செல்வர் கல்வி அமைச்சர் T. S. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கு மிக்க நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்நூலை அன்பது கூர்ந்து குறித்த நேரத்தில் அச்சிட்டு வெளியிடும் பொருப்பை மேற்கொண்ட வேலூர் இராமச்சந்திரா பிரஸ் சொந்தக்காரரான திருவாளர் D. நடேச முதலியார் அவர்களுக்கு என் வணக்கம். மக்கள் வாழ்வுக்குத் தங்கச் சுரங்கம்போல் வழிகாட்டும் உத்தமர் காந்தி உபதேச மலரைத் தமிழறிந்த ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து வளம் பெறுவார்களாக.

இங்ஙனம்

வேலூர்,
17—1—49,

தங்களன்புள்ள ஊழியன்,
மு. பெருமாள்.

வாழ்க காந்தியம்.

ஸ்ரீ ராமச்சந்திரா, பிரஸ் வேலூர். காபி 1000, 27—1—49.

உ

ஜெய் ஹிந்த்

மகாத்மாஜியின் பிறப்பும், சேவையும்.

பிறப்பு 2—10—1869

அவர் சேவைகள்

25 வயதில் பொது ஊழியம் ஆரம்பம்

17 முறை சிறைவாசம் செய்துள்ளார்.

17 முறை உண்ணுவிரத மிருந்தார்

ஆக 54 வருஷங்கள் தேச ஊழியம் செய்துள்ளார்.

இறப்பு 30—1—1948

அவர் லக்ஷியங்கள்

அஹிம்சை (சாத்மீகம்)

கதர் வளர்ச்சி

தீண்டாமை விலக்கல்

மதுபானம் ஒழித்தல்

இந்து முஸ்லீம் ஒற்றுமை

கிராமக் கைத்தொழில் வளர்ச்சி

சமர்ப்பித்தல்

மகாத்மாஜி அவர்களின் முதலாவது ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு 30—1—49 ஆகிய இன்று இந்நூலை புருஷோத்தமராகிய அவரது ஞாபக மலராக பாரதமாதாவின் பாத கமலங்களில் பக்தி பூர்வமாகச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

ஊழியன்,

மு. பெருமாள்

வந்தே மாதரம்

அட்டவணை

தலைப்பு நெ.	மதம்			பக்கம்
1.	கடவுள் உண்டா?	....	....	1
2.	விக்ரக ஆராதனை	....	....	2
3.	ஹிந்து மதம்	....	....	3
4.	வர்ணாசிரம தர்மம்	....	....	4
5.	மதப்பிணக்கு ஏன்?	....	....	6
6.	பிரார்த்தனை	....	....	7
7.	பசு பாதுகாப்பு	....	....	8
8.	சத்தியம்	....	....	9
9.	அஹிம்ஸை	....	....	10
10.	பற்றற்ற வாழ்வு	....	....	11
11.	உழைப்பின் உன்னதம்	....	....	12
12.	பிரதிக்ஞை	....	....	13
13.	கீதை மகத்துவம்	....	....	14
14.	அஞ்சுதல்	....	....	16
15.	மரணம்	....	....	17
16.	மோக்ஷ நிலை	....	....	18
17.	மதம் மாறலாமா?	....	....	20
18.	காட்டுக்குப்போக வேண்டுமா?		....	20
	சமூகம்			
19.	பிராம்மணன்	....	....	22
20.	அன்பு	....	....	22
21.	பிரும்மச்சரியம்	....	....	23
22.	ஆரோக்கியம் எது?	....	....	25

23.	மனித சரீரம்	26
24.	நாவடக்கம்	27
25.	உணவு	28
26.	திரேகப் பயிற்சி	29
27.	காற்று	30
28.	ஜலம்	31
29.	ஜலச்சிகிச்சை	33
30.	மண் சிகிச்சை	34
31.	ஜ்வரமும், சிகிச்சையும்	34
32.	லாகிரி வஸ்த்துக்கள்	36
33.	திருடாமை	37
34.	அடக்க முடமை	38
35.	நம்பிக்கை	39
36.	ஸமூக பகிஷ்காரம்	41
37	பெண்ணின் பெருமை	42
38.	மணவினை	43
39.	இல்லற வாழ்வு	44
40.	குழந்தைகளைப் பழக்குதல்	45
41.	உடன்கட்டை ஏறுதல்	46
42.	தேவதாசிகள்	47

அரசியல்

43.	கல்விப் பயிற்சி	48
44.	ஹிந்தி	50
45.	ஆசிரியர்களுக்கு	50
46	மாணவர்கள்	52
47.	காங்கிரஸ்	53
48.	ஜனநாயக முறை எது ?	54
49.	சீமையில் சேவாக்கிராம முனிவர் பேச்சு	55

50.	லங்காஷயர் தொழிலாளர் முன்		....	56
51.	கைராட்டினம்	....	....	58
52.	கதர்	....	....	59
53.	சுதேசி தர்மம்	....	....	60
54.	மதுவிலக்கு	....	....	61
55.	தீண்டாமை	....	....	62
56.	ஒத்துழையாமை	....	....	63
57.	வகுப்புத் தொல்லைகள்	....	...	65
58.	ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை	....	....	66
59	மதமும் ராஜியமும்	....	....	67
60.	தியாகமூர்த்தி திலகர்	....	....	68
61.	மிருக பலம்	....	....	69
62.	ராஜியக் கொலைகள்	....	....	70
63.	தொழிலாளர்கள்	....	....	71
64	முதலாளிகள்	....	....	73
65.	இயந்திரம்	....	....	74
66.	பொது ஸ்தாபனம்	....	....	75
67.	விடுமுறையில் மாணவர்களின் வேலை		....	76
68.	கிராம ஊழியர்கள்	....	...	77
69.	பஞ்சாயத்துகள்	...	....	78
70.	உண்மைச் சேவை	...	....	79
71.	தியாக வாழ்வு	....	....	80
72.	யுத்தம்	....	....	81
73.	பிறந்தநாள்	....	....	82
74.	உபவாசம்	...	....	83
75.	விவசாய வளர்ச்சி	....	....	84
76.	சுதந்திர இந்தியா	....	....	85
77.	எனது முடிவு	....	....	87
78	ராம நாமம்	....	....	88

ஓம்.

கடவுள் உண்டா?

---

1. கடவுள் இல்லை என்று சொல்பவரை நான் அறை கூவி அழைத்து "கடவுள் இருக்கிறார்" இருந்தார்! இனியும் இருப்பார்" என்று எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்வேன்,

2. நாம் உயிருடனிருப்பதும், நமது பெற்றோர்கள் உயிருடனிருப்பதும், நமது முன்னோர்கள் உயிருடனிருந்ததும் உண்மையாயின், இச்சிருஷ்டிக்கெல்லாம் மூலகர்த்தா ஒருவர் இருந்து தான் ஆகவேண்டும். அவர் இல்லை என்றால் நாமும் இல்லை தான்.

3. இவ்வகிலத்திலுள்ள இவ்வளவு உயிர்களையும் எது இயங்குவிக்கிறதோ அச்சக்தி தான் பரமாத்மா.

4. எல்லாவற்றையும் அடக்கியாளும் அந்த சித் சக்தியே "ஆண்டவன்."

5. கடவுள் அன்புருவானவர்; அவர் தான் பூரண சுத்தமானவர்.

6. உலகை சிருட்டிப்பது, அழிப்பது, மறுபடியும் தோற்றுவிப்பது அந்த சக்தி மயமான ஆண்டவன் தான்.

7. சத்தியம் தான் ஈசுவரன். நமது மனச் சாக்ஷியே ஈசன்.

8. தன்னோடு ஆண்டவன் இருப்பதாக எண்ணுகிறவன் உறுதியான நம்பிக்கையோடு வாழ வேண்டும்.

9. கடவுளது கட்டளைகட்குக் கீழ்ப்படிந்தால் வெகு சுலபமாக நமது ஆயுட்காலத்தைக் கழிக்கலாம் என்பது நிச்சயம்

10. கோயில்களுக்குச் சென்று, தேங்காய் உடைப்பதோ, கர்ப்பூரம் கொளுத்துவதோ ஒரு நாளும் கடவுள் தொண்டாகாது. ஒவ்வொரு உயிரும் ஈசுவர ஸ்வரூபமாதலால் உயிர்களுக்குத் தொண்டு செய்வதே கடவுள் தொண்டாகும்.

2. விக்ரக ஆராதனை.

1. விக்கிரகத்தைத் தரிசிக்காமல் தியானம் செய்ய முடியாதவருக்கு ஆலய தரிசனம் அவசியமாகும்.

2. விக்ரக ஆராதனையில் நான் அவநம்பிக்கை கொண்டவனல்ல.

3. கர்மத்தைச் செய்ய ஓர் ஆற்றலையும், ஆத்மாவை உறுதியாக்கிக்கொள்ள ஓர் தூய்மையையும் தரிசனமானது உண்டாக்குகின்றது.

4. கர்மத்திற்கு ஈடாக தரிசனத்தைக் கூற முடியாதாயினும் மனிதனுக்கு தைரியமூட்டும் சக்தி தரிசனத்திற்கு இருக்கிறது.

5. ஆலய வணக்கத்திலே ஜீவித ஈசுவரனை நாம் வணங்குகின்றோம்.

6. மனித ஜாதிக்கு உண்டான ஆன்மார்த்த வேட்கையைப் பூர்த்தி செய்வது ஆலய வணக்கம்.

7. கல்லால் எழுப்பப்படும் கோயில்கள் மனிதக் கோயில்களின் ஒரு விரிவேயன்றி வேறல்ல.

8. கோயில்களின் மூலமாகவே லக்ஷக்கணக்கானவர்களிடம் ஈசுவர பக்தி பெருகி வருகின்றது.

9. கோயில்களின் ஊழல்களைப் போக்க வேண்டிய தவசியமே. ஆனல் கோயில்களையே அழித்து விடுவது ஆண்டவனையும், மதத்தையுமே நிராகரிப்பதாகும்.

3. ஹிந்து மதம்.

1. உலகத்தின் எல்லா மதங்களையும் போலவே ஹிந்து மதத்திலும் அடிப்படையான பல தத்துவங்கள் உண்டு. அவைகள் என்றும் மாறுவதில்லை.

2. புலன்களை எவ்விதத்திலும் அடக்க வேண்டுமெனப் புகல்வது ஹிந்து மதம்.

3. உடலின் மீதுள்ள ஆசையைத் துறந்து ஆத்மாவை சுதந்திர முடையதாக்க வேண்டுமெனப் போதிப்பது ஹிந்து மதம்.

4. வேதங்கள், உப நிடதங்கள், புராணங்கள் முதலிய ஹிந்து தர்ம சாஸ்திரங்களிலும், பகவானின் அவதாரங்களிலும், மனிதனின் மறு பிறப்பிலும் எனக்கு நம்பிக்கையுண்டு.

5. நானும் ஓர் ஸநாதன ஹிந்து என்று உரிமை பாராட்டி வருகின்றேன். ஆயினும் ஹிந்து மதத்தின் பெயரால் நடக்கும் சில வழக்கங்களை நான் ஏற்றுக்கொள்வதில்லை.

6. ஆதிகாலம் தொட்டு வளர்ச்சியுற்று ஹிந்து மதம் பரிணாமத்தை அடைந்துள்ளது.

7. எனக்கு உயிரைவிடப் பிரியமானது ஹிந்து மதம்.

8. நெற்றியில் நெடுக விபூதி நாமம் அணிவதும், மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பதும், அங்குமிங்கும் ஓடியாடி யாத்திரை செய்வதுமட்டும் ஹிந்துமத போதனையல்ல.

9. நான் ஓர் சீர் திருத்தக்காரன். ஆயினும் ஹிந்து தர்மத்தின் ஆணிவேராயுள்ள தத்துவங்களை ஒரு போதும் மீறி நடக்கமாட்டேன்.

10. பூவுலகில் அவதரித்த எல்லாப் பெரியோர்களையும் வணங்குவதற்கு ஹிந்து மதம் இடந்தருகிறது. இதரர்களுக்குப் போதனை செய்து ஹிந்து மதத்திற்கு அவர்களை இழுக்க வேண்டுமென்று ஹிந்து மதம் குறுகிய நோக்கக் கட்டளையொன்றும் இடுவதில்லை.

4. வர்ணாசிரம தர்மம்.

1. வர்ணாசிரம தர்மானுஷ்டானம் மனித இயற்கையைச் சார்ந்தது என்பது என்னபிப்பிராயம்.

2. மனிதப் பிறவிக்கும் வர்ணாசிரம தர்மத்துக்கும் சம்பந்தமுண்டு.

3. வர்ணாசிரம மென்பது தன்னடக்கம். சமூக சக்தியைச் சிக்கனமாகச் செலவழிக்கும் வரையறை தான் வர்ணாசிரமம்.

4. வேதகாலத்திலிருந்த பண்டைய வருணாசிரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு.

5. தற்காலத்தில் அர்த்தமற்ற முறையில் அனுஷ்டிக்கப் படும் "வர்ணாசிரம தர்மம்" எனது தர்மமல்ல.

6. தற்கால ரீதியில் விளங்கும் ஜாதியில் எனக்கு நம்பிக்கையே கிடையாதென்று நான் பல முறை சொல்லி யிருக்கிறேன்.

7. மனிதர் யாவரும் சமம். ஆனால் சமமென்பது ஆத்மாவைக் குறிக்குமே ஒழிய உடலை அல்ல.

8. வித்தை அறிவித்தல், சக்தியற்றவரைப் பகைவரி னின்றும் காத்தல், நிலங்களை உழுது பயிர் செய்தல், உடலா லுழைத்துப் பணி செய்தல் என்னும் நான்குமே பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்கு வர்ணங்கள் உண்டாயின.

9. இந்தத் தொழில்கள் எல்லா மனித வர்க்கத்திற்கும் பொதுவானவையே.

10. காலம் ஆக ஆக ஹிந்துக்கள் சோம்பேறிகளாகி அவரவருக்குரிய காரியத்தை அவரவர் செய்வது தவறியதால் வர்ண தர்மங்கள் அழிந்து எண்ணிக்கையற்ற ஜாதிகள் தோன்றின.

5. மதப்பிணக்கு ஏன்?

1. நாம் நம் சமயத்திடத்துக் காட்டும் மதிப்பைப் போல பிற மதங்களிடமும் சமத்துவம் காட்ட வேண்டும்.

2. கடவுளை எப்படி நாம் கண்டறியவில்லையோ, அவ்வாறே மதத்தின் பூர்ண அர்த்தத்தையும் நாம் இன்னும் அறிந்துக்கொள்ளவில்லை.

3. எல்லா மத நம்பிக்கைகளும் சத்தியத்தை வெளிப்படுத்தவே ஏற்பட்டிருக்கின்றன.

4. எல்லா மதங்களையும் சமமாகப் பார்ப்போமானால் பிற மதங்களில் உள்ள நல்ல விஷயங்களைக் கிரகித்துக்கொள்வதை நாம் நமது கடமையென்றே எண்ணுவோம்.

5. உண்மையான மத அறிவு இருந்தால் மதத்திற்கு மதம் வித்தியாசம் தோன்றவே தோன்றாது.

6. பிற மதங்களிடம் தாராள நோக்கம் காட்டப் பழகினவனுக்குத் தன் மதத்தைப்பற்றியும் செவ்வையாக அறிந்துக்கொள்ளமுடியும்.

7. பிற மதங்களிடம் பக்தி காட்டுவதென்றால் அம் மதங்களில் உள்ள தப்பிதங்கள் நம்மை உறுத்த வேண்டுவதில்லை.

8. நம்முடைய மதமில்லை என்ற காரணத்துக்காக இன்னொரு மதத்தைத் தூஷிக்க வேண்டுமென்ற எண்ணம் நமக்கு ஏற்படக்கூடாது.

9. எந்த மதக் கிரந்தமாயினும் சரி அதனிடம் பக்தி காட்டிப் படிப்போமானல் ஒவ்வொன்றிலும் ஒரே உண்மை பொதிந்து கிடப்பது தெரியவரும்.

10. ஒரே அஸ்திவாரத்தின் மீதுதான் உலகத்தின் மதங்களெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன.

6. பிரார்த்தனை.

1. பிரார்த்தனைதான் என்னைக்காப்பாற்றி வருகின்றது. அது இல்லாமலிருந்தால் பல வருடங்களுக்கு முன்னமேயே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்.

2. பிரார்த்தனை செய்யச் செய்ய கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஒரு ஆசையும், ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று.

3. உடலுக்கு எவ்வாறு உணவு அவசியமோ அவ்வாறே ஆத்மாவுக்குப் பிரார்த்தனை அவசியம்.

4. ஓர் சிறு குழந்தை எவ்வாறு தாயினிடம் நடந்துக் கொள்ளுமோ அதே மாதிரி பகவானிடத்தில் ஒரு திட நம்பிக்கையோடு நான் வாழ்கின்றேன்.

5. மெய்யடக்கத்தோடும் நமக்கு ஒன்றும் தெரியாது என்ற எண்ணத்தோடும், ஒரு நம்பிக்கையோடும், நாம் பிரார்த்தனையைத் தொடங்கவேண்டும்.

6. பிரார்த்தனையினல் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று, மனக் கற்பனையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகின்றேன்.

7. பிரார்த்தனை யென்பது அவரவர்களுடைய தாய் மொழியிலிருக்க வேண்டுமென நான் அபிப்பிராயப் படு கிறேன். அது தான் ஆத்மாவைக் கவ்வும்

8. படைத்தவனிடத்தில் ஹிருதயத்தைப் பறி கொடுப்பதும், அவருடைய ஆசியை கோருவதுமே பிரார்த் தனை யென நான் கருதுகின்றேன்.

9. ஸர்வம் ஈஸ்வர மயம் என எண்ணுபவர்கள் எந்தத் தொழில் செய்வதையும் பிரார்த்தனையாக நினைப்பர்.

10. உலகிலுள்ள எல்லாவற்றிற்கும் நியாயமாக நடக்க அருளும்படி பகவானைக் கேட்பது தான் சிறந்த பிரார்த்தனை.

7. பசு பாதுகாப்பு.

1. கோ சம்ரக்ஷணம் தான் ஹிந்து மதத்தின் அச்சாணி போன்றது.

2. மனிதப் பிறவியின் சிறந்த கருத்துக்கள் ஆனிறைக் காப்பதில் அடங்கியிருக்கின்றது.

3. கோ சம்ரக்ஷணையில் எனக்கு நம்பிக்கையுண்டு சாதாரணமாக ஜனங்கள் இவ்விஷயத்தில் கொண்டுள்ள எண்ணத்தைவிட விசாலமான கருத்துடையவன் யான்.

4. பசுவைக் காப்பதென்றால் பராபரனின் படைப்பில் அடங்கிய பலவகை ஜீவராசிகளையும் காப்பதென்றே பொருள் கொள்ள வேண்டும்.

5. உலகுக்கு ஹிந்து மதம் போதித்த புனிதமான உபதேசம் கோ சம்ரக்ஷணமேயாகும்.

6. பசுவினிடமிருந்து இரத்தமெடுப்பதுபோல சொட்டுப் பால் மிஞ்ச விடாமல் கறந்து விடுவதும், பசுவுக்குப் போதிய தீனி போடாது இளைக்க விடுவதும், கொடுமையும், பாபமுமாகும்.

7. கன்றுக்குட்டிக்குச் சேர வேண்டிய பாலையும் மனிதன் கறந்துகொள்வது அநியாயம்.

8. வாயில்லாச் சீவன்களான பசுமாடுகள் நமது ஆத்மாவைத் துல்லியம் செய்யவே உள்ளன என்பது எனது கொள்கை.

9. பசுவின் ஜீவனிலிருந்து மனித ஜீவன் அநேக உண்மைகளை அறியலாம்.

10. எந்த நாள்வரை ஹிந்துக்கள் பசுவைக் காக்கின்றார்களோ அந்த நாள்வரை ஹிந்து மதம் பசுமையாயிருக்கும்.

8. சத்தியம்.

1. மனித வாழ்வுக்கு மூச்சுப் போன்றது "சத்தியம்"

2. சத்திய நோக்கமில்லாது போய்விட்டால் வாழ்வின் தத்துவங்களெதையும் அனுஷ்டிக்க முடியாமலே போய்விடும்.

3. மனதிலும், பேச்சிலும், செய்கையிலும் உண்மை இருக்க வேண்டும். இவ்வுண்மையை நன்றாக அறிந்தவனுக்குத் தெரிய வேண்டியது வேறொன்றுமில்லை.

4. சத்திய சோதனை என்பது ஒரு பெரிய தவமாகும். சத்திய உபாசகன் துன்பங்களை ஏற்றுக்கொள்ள நேரிடும்.

ஒருவேளை பிராணத்தியாகமும் செய்ய நேரிடலாம். துளிச் சுய நலத்திற்கு கூட சத்திய வாழ்வில் இடமில்லை.

5. சத்திய உபாசகனாக இருப்பதே மனித வாழ்வின் முக்கிய நோக்கம்.

6. சத்தியமிருக்கும் இடத்தில் களங்கமற்ற அறிவும் இருக்கிறது. சத்தியமில்லா விடத்து சுத்த ஞானம் கிடையாது.

7. எவன் உண்மையாகப் பாடுபடுகின்றானோ அவனுக்கு வெளிச்சம் தோன்றியே தீரும். "சத்தியம்" என்ற மரத்தின் இலைகளே போன்று இதர நற்குணங்களும் இருக்கின்றன.

8. சத்தியம் எப்பொழுதும் உள்ளது. துக்கத்திற்கு அங்கு இடமில்லை.

9. கடவுள் தான் சத்தியம். சத்தியம் தான் கடவுள்.

10 சத்திய ஸ்வரூபியான கடவுள் எனக்கு விலை மதிக்க வொண்ணாத பொக்கிஷமாயிருக்கிறார்.

9. அஹிம்ஸை.

1. அஹிம்ஸா தர்மம் பேடித்தனத்தைச் சார்ந்ததல்ல. சக்தியற்ற தன்மையைச் சார்ந்ததல்ல.

2. அஹிம்ஸை பல நற்குணங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றது.

3. பகுத்தறிவு, துறவு, தவம், சமத்வம், அறிவு முதலிய பல அஹிம்ஸை மீது கட்டப்பட்டுள்ளன.

4. கூறிய ஒரு வாளின் முனை மீது நடந்து செல்வது எவ்வளவு கடினமானதோ அவ்வளவு கடினமானது அஹிம்ஸை மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகுவதும்.

5 உயிர்கொண்டு வாழும் எந்த ஜீவனுக்கும் துன்ப மிழைக்கக் கூடாது, என்பது அஹிம்சா தர்மத்தின் ஒரு அம்சம்தான்.

6. பிறரைப்பற்றி மனதில் கெடுதலாக எண்ணுவதும் பொய் பேசுதலும், மனதில் வெறுப்புக் கொள்ளுதலும், கெட்ட எண்ணங்களை மனதில் வளர்த்து வருவதும் அஹிம்சா தர்மத்தை நாசமாக்குவதாகும்.

7 சத்தியம் என்னும் ஆலயத்தை அடைய விரும்பு பவன் அஹிம்சை என்னும் பாதை வழியாகத் தான் நடந்து செல்ல வேண்டும்.

8. மன்னிப்பதின் உச்சஸ்தானம் அஹிம்சையே யாகும். பயமில்லாமல் இருப்பவனாலேயே அஹிம்ஸையை அனுஷ்டிக்க முடியும்.

9. விடாமல் முயற்சி செய்வதன் மூலமாகவே ஒருவன் சத்தியத்தையும். அஹிம்சையையும் உணர முடியும்.

10 அஹிம்சையை அனுஷ்டித்தால் நம் மனத்தி லுள்ள பல தீய குணங்களும் நாளுக்கு நாள் சுருங்குகின்றன

10 பற்றற்ற வாழ்வு.

1. கடவுளுடைய கடாக்ஷத்தில் நாம் நம்பிக்கை வைத்திருப்போமாயின் அன்றாடம் வேண்டிய உணவையும், அவசியமான இதர தேவைகளையும் அவர் தருவார்

2. அன்றுடம் வேண்டியதையே பகவான் தந்திருக்கின்றுர். அதற்குமேல் தரவில்லை. என்பதை நாம் உணர்ந்துக் கொள்ளாமலிருக்கின்றோம்.

3. பணக்காரர்களிடம் மிதமிஞ்சிய பொருள்கள் இருக்கின்றன. அவ்வளவு அவர்களுக்குத் தேவையில்லை.

4. அதே பொருள்களை வேண்டி லக்ஷக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்து சாகின்றுர்கள். அவனவனுடைய தேவைகளை மாத்திரம் ஒவ்வொருவனும் வைத்துக்கொண்டிருப்பாஞயின் உலகத்தில் ஒருவருக்காவது தேவை இருக்காது.

5. இது அனுஷ்டிக்கப் படாததால் ஏழைகளுக்கு எப்படி மனக்கிலேசங்கள் உண்டாகின்றதோ அவ்வாறு செல்வவான்களும் கிலேசமடைகின்றனர்.

6. உலகத்தில் சந்துஷ்டி பரவியிருப்பதற்காக பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவ வேண்டும்.

7. போதுமென்ற மனோபாவத்தோடு பறவைகளைப் போல் வாழ வேண்டும்.

11. உழைப்பின் உன்னதம்.

1. உழைத்துத்தான் மனிதன் உயிர் வாழ வேண்டும் என்பது ஈசுவர நியதி.

2. உழைக்காத மனிதனுக்கு உணவு உண்ண எவ்வாறு உரிமை இருக்க முடியும்?

3. எல்லோருமே தத்தம் உணவைப் பெற உழைப்பில் ஈடுபடுவார்களானுல், இந்த வகுப்பு வேற்றுமைகள் ஒழிந்து போகும்.

4. ஏழையானாலும் பணக்காரனானாலும், ஒவ்வொரு வனும் ஏதோ ஒரு ரூபத்தில் தேகாப்பியாசம் செய்தே தீர வேண்டியிருக்கிறது. இல்லையேல் உணவு ஜீரணமாகாது.

5. அந்த அப்பியாசத்தை ஏன் பொருள்களை உற்பத்தி செய்யும் ஜீவன் உழைப்பாக மாற்றிக்கொள்ளக் கூடாது ?

6. ஒருவனுக்கு ஜீவன் உழைப்பு என்பது ஆண்டவன் அருளிய வரப்பிரசாதம்போல் உதவி புரிகின்றது.

7. கீதையின் மூன்றாம் அத்தியாயத்தில் தொழில் செய்யும் தத்துவத்தைத் தான் விவரிக்கப்பட்டிருக்கிறது.

8. ஆண்டவன் ஓர் இமைப் பொழுதும் ஓய்ந்திராது அநவரதமும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்.

9. ஆண்டவனுக்கு நாம் சேவை புரிய வேண்டுமானால் அல்லது அவருடன் நாம் ஐக்யப்பட வேண்டுமானால் அவரைப் போலவே நாமும் அலுப்புச் சலிப்பின்றி உழைக்க வேண்டும்.

12. பிரதிக்ஞை.

1. பிரதிக்ஞை என்றால் கண்டபடி மனம் அலைந்து திரியாதபடி தடுக்கும் சங்கற்பம் என்றே அர்த்தம்.

2. மனதைக் கெடுத்து இழுக்கக் கூடிய வஸ்துக்களினின்று அதைப் பாதுகாக்க கூடியது பிரதிக்ஞை தான்.

3. அசௌகர்ய மேற்பட்ட உடனே வளைந்து கொடுப்பதானால் அந்த சங்கற்பத்தால் பிரயோசனமே யில்லை.

4. தளரா உறுதியுடன் கூடிய சங்கற்பம் இல்லா விட்டால் முன்னேற்றம் என்பதே சாத்தியமில்லை

5. முதலில் புண்ணியமெனக் கருதிச் செய்துகொண்ட பிரதிக்ஞை பின்னால் பாபகரமானது என்று தெரியவந்தால், உடனே அந்தப் பிரதிக்ஞையைக் கைவிட்டு விடுவதே நியாயம்.

6. சந்தேகமாயிருக்கும் விஷயங்கள் குறித்து எவரும் பிரதிக்ஞை செய்துக்கொள்வதில்லை; செய்துக் கொள்ளவுங் கூடாது. உலக முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட தத்துவங்கள் சம்பந்தமாக மாத்திரமே பிரதிக்ஞை செய்துக்கொள்ள வேண்டும்.

7. உயிரையே துறக்க நேர்ந்தாலும் தங்கள் விரதத்தில் தளர்வதில்லையென்ற உறுதிகொண்ட மனிதர்கள்தான் என்றேனும் ஒரு நாள் ஈசுவரனையும் தரிசிக்கலாம்.

8. பிரதிக்ஞைகள் செய்துக்கொள்வது பலவீனத்தின் அறிகுறியல்ல; வலிமையின் அடையாளமே யாகும்.

9. இறைவன் தானாகட்டுமே; தமது சட்டதிட்டங்களி லிருந்து அவரே ஒரு மயிரிழை பிறழ்வாராயினும், அவர் இறைவனா யிருப்பதேது?

10. ஆத்ம பரிசுத்தத்துக்கும், ஸ்வானுபவத்துக்கும் பிரதிக்ஞைகள் அவசியமேயாகும்.

13 கீதை மகத்துவம்.

1. கீதை வெறும் மதியால் அறியக் கூடிய தன்று; ஹிருதயத்தால் அறிய வேண்டியது.

2. சாதாரண தத்துவத்தைப் போதிப் பதற்காக கீதையின் ஆசிரியர் அதை எழுதவில்லை.

3 மேன்மை விரும்புவோர் தமது ஆத்ம நிலையை எய்துவதற்குச் சாதகமான ஓர் ஒப்பற்ற வழியை உபதேசிப்பது கீதையின் முக்கிய உத்தேசம்.

4. தேகம் இருக்கும்பொழுது கர்மம் விலகாது கர்மத்திலிருந்து விடுபட்டவன் எவனுமில்லை என்று போதிப்பது கீதை.

5. கீதாசாரியார் ஞானத்துடன் பக்தியைப் பிணைத்து அதற்கு முதல் ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார். பக்தியில்லாத ஞானம் தீங்கு விளைவிக்கும்.

6 கீதை போதிக்கும் மோக்ஷம் என்ற பதத்தின் பொருள் ஆத்மாவின் பரம சாந்த நிலையாகும்.

7. பலனில் பற்றை விலக்கி கர்மம் செய் என்று கீதை உபதேசிக்கிறது.

8. கீதையின் உபதேசப்படி பலனைத் தியாகம் செய்வதற்கு தர்மத்தில் அளவற்ற நம்பிக்கை வேண்டும்.

9 கீதா ஆசிரியர் பெருமைவாய்ந்த பதங்களின் பொருளை விசாலமாகச் செய்யும் சூக்ஷமத்தை நமக்குக் கற்பித்திருக்கிறார்.

10. எந்த அறநெறி விவகாரங்களில் பயன்படுகிறதில்லையோ, அது உண்மையில் அறமல்ல. இந்த தத்துவம் கீதையில் இருப்பதாக நான் எண்ணுகிறேன்.

14. அஞ்சுதல்.

1. பயத்தை உதறி யெறிந்தவன் தான் சத்திய சோதனைக்கு ஏற்றவன்.

2. பயமில்லாதவனுல்தான் அன்பு மதத்தை அனுஷ்டிக்க முடியும்.

3. உலக விவகார சம்மந்தமான பயங்களினின்றும் விடுதலை பெற்றவனே தீரன்.

4. வியாதியிடத்து பயம், காயம்பட்டால் பயம், பந்துமித்திரர்களைப் பறிகொடுத்தால் நடுக்கம், கீர்த்திபோய் விடுமோ என்ற கிடுகிடுப்பு, துன்ப மேற்படுமோ என்ற பயம் இத்தகைய பலவிதமான பயங்களையும் உதறி யெறிய வேண்டும்.

5. தாங்கள் செத்துப் போவதற்கு துணிந்தவர் பலர் தங்கள் உறவினர் சாவதை சகிக்க முடியாதிருக்கின்றனர்.

6. உலகினர் ஒன்றைத் தூஷிக்கிருர்களென்று பயந்து அக்காரியத்தைச் செய்யத் தயங்குவது தவறு.

7. தேகத்தினிடத்துள்ள இச்சைதான் மனிதனைக் கவர்ந்திருக்கின்றது. அதைச் சுற்றிச் சுற்றி அநேக பயங்கரங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன.

8. உள்ளூர மனதில் ஏற்படும் பயங்களையும் நாம் விட்டுவிடவேண்டும்.

9. பகவானுடைய இந்த உலகத்தில் எதுவும் நம் முடையதாகாது. ஏனெனில் நாமும் அவனுடையவர்களே ஆகவே நாம் ஏன் பயப்படவேண்டும்.

10. தாசிக்கும் கீழ்ப்பட்டவர்களென நினைத்துக் கொண்டோமானால் நம்மைச் சூழும் பயமெல்லாம் பனி போல விலகிவிடும்.

15. மரணம்.

1. நாம் மரணத்திற்கு அஞ்சாது வாழவேண்டுவது அவசியமாகும்.

2. இந்தியர்களை மகா வேதாந்திகளென எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் சாவுக்கு இந்தியர்கள் பயப்படுகிற மாதிரி உலகில் ஒரு ஜாதிகூட இவ்வளவு நடுங்குவதில்லை.

3. ஆங்கிலேயர்கள் தங்கள் உயிர்களைப் பைகளில் போட்டுக்கொண்டு அலைகின்றனர்.

4. போயர் பெண்மணிகளுக்கு மரண பயத்தைப் பற்றிய உணர்ச்சியே கிடையாது.

5. நாம் அடிமையாக வளர்வதினும் நமது உடலைக் குழியிலிட்டு வீர ஞாபகம் கொள்வது எவ்வளவோ மேன்மை யானது

6. பிறரைக் கொல்வதில்லையென்றும் தாங்கள் மட்டும் சாவதற்கு தயாராக யிருப்பவர்களைக் குறித்தும் என்ன சொல்வது? இவர்கள்தான் உலகில் பூஜிக்கத் தகுந்தவர்கள்.

7. நமக்கு ஸ்வராஜ்யம் கிடைத்தவுடன் நம்மில் அநேகர் மரணத்திற்கு அஞ்சும் ஸ்வபாவத்தை இழந்து விடுவோம். இல்லாதுபோனல் ஸ்வராஜ்யமே கிடைக்காது.

8. குழந்தையோ, வாலிபனே வயோதிகனே இறந்து விட்டானென்று கேட்டால் நாம் ஏன் திடுக்கிடவேண்டும்.

9. இந்த உலகத்தில், பிறப்பும் இறப்பும் ஒவ்வொரு நிமிஷமும் நடைபெறும் காரியமாகும்.

10. தீரர்கள் புன்சிரிப்போடு மரணத்தைத் தழுவு வார்கள்.

16. மோக்ஷ நிலை.

1. சென்ற முப்பது வருஷ காலமாக நான் வருந்தி முயன்று வருவதெல்லாம் ஆன்மானுபூதி யடைவதற்கேயாம். அதுவே மோக்ஷம் அதாவது இறைவனை நேருக்கு நேரே காணுதல்.

2. மோக்ஷத்தின் பொருட்டே நான் உயிர் வாழ் கின்றேன் அதிலேயே அமிழ்ந்திருக்கிறேன். நான் எழுது வனவும், பேசுவனவும் அரசியல் துறையில் செய்யும் முயற்சி களும் எல்லாம் இந்த இலக்ஷிய சித்தியின் பொருட்டே.

3. ஆண்டவனின் நாம ரூபங்கள் எண்ணிலடங் காதவை. அவற்றைப்பற்றி எண்ணும்போது நான் அள வில்லா ஆச்சர்யமும், அச்சமும் அடைந்து ஒரு கணநேரம் ஸ்தம்பித்து விடுகிறேன்.

4. அவனுடைய தரிசனம் எனக்கு இன்னுங் கிட்ட வில்லையாயினும் அவனைத் தேடிக்கொண்டே யிருக்கிறேன்.

இம் முயற்சியில் என் உயிரையே தியாகம் செய்யவேண்டி வந்தாலும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன்.

5. சத்திய மார்க்கம் கத்தியின் விளிம்பைப்போல் நேரியதாயும், கூர்மையுடையதாயுமிருப்பினும், அதுவே எனக்கு விரைவில் செல்லக்கூடிய எளிதான வழியாயிருந்து வந்திருக்கின்றன.

6. சத்தியப் பொருளான இறைவன் பல முறைகளில் மங்கிய மின்னலைப்போல் என் முன் தோன்றி மறைந்திருக்கிறான்.

7. சத்திய தரிசனம் இறுமாப்பு கொண்ட ஒருவனுக்கு அசாத்யமானவையாகப்படலாம். ஆனால் கபடமற்ற குழந்தை ஒன்றுக்கு அவை முற்றும் சாத்யமானவை.

8. சத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டவன் தூசியும் தன்னை நசுக்கக் கூடியவாறு தன்னை தாழ்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அவனுக்குச் சத்திய தரிசனம் ஒரு கண நேரமேனும் சித்தியாகும்.

9, "மகாத்மா" பட்டத்தையும் நான் மதிக்கவில்லை பல முறைகளில் எனக்கு அப்பட்டம் பெரிதும் மனத் துன்பத்தை அளித்திருக்கின்றது

10. எனக்குப் பிறப்பளித்த பெருமான் எவனோ, என்னுடைய ஒவ்வொரு மூச்சும் எவனுடைய ஆக்ஞைக்கு அடங்கியதோ அத்தகைய ஆண்டவனிடமிருந்து நான் இன்னும் வெகு தூரத்திலிருக்கின்றேன்,

17. மதம் மாறலாமா ?

1. உலக நன்மைக்காக ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்குச் செல்வதென்றால் தயக்கமின்றி அங்ஙனம் செய்யும்படி நான் சொல்லுவேன்.

2. மதம் என்பது ஹிருதயத்தைப் பற்றியது. எந்த தேக அசௌகர்யத்தைக் குறித்தும், எந்த சொந்தக் கஷ்டங்களுக்காகவும் ஒருவர் தமது மதத்தை விட்டுவிடுதல் கூடாது.

3. சர்க்கார் உதவியுடன் நடக்கும் மதத்தாலும், சர்ச்சாலும் நாம் கஷ்டப்பட்டது போதும்.

4. எந்த சங்கம் தன்னுடைய மதம் உயிரோடிருப்பதற்குச் சர்க்கார் உதவியை எந்த அளவிலேனும் எதிர்ப்பார்த்து நிற்கின்றதோ அந்த சங்கத்திடம் மதிக்கக்கூடிய மதம் எதுவும் கிடையாது என்று கூறுவேன்.

5. சர்க்கார் மதபோதனையைச் செய்யமுடியும் என்று நான் கருதவில்லை.

6. மத போதனையை மதச் சங்கங்கள்தான் நடத்த வேண்டும்.

7. அற வொழுக்கம் சகல மதங்களுக்கும் பொதுவானதென்றே எண்ணுகிறேன்.

18. காட்டுக்குப் போக வேண்டுமா ?

1. எனது வாழ்வின் லக்ஷியத்தை அடைய நான் காட்டுக்குப் போக வேண்டியதில்லை ; மூக்கைப் பிடித்துத் தியானம் செய்ய வேண்டியதில்லை.

2. காட்டுக் குகையில் வசிக்கும் ஒருவன் ஆகாயக் கோட்டைகள் கட்டலாம். ஆனால் ஜனக மஹாராஜனைப் போன்று அரண்மனையில் வசிக்கும் ஒருவர் ஆகாயக்கோட்டைகள் கட்ட வேண்டியதில்லை.

3. சிந்தனை என்னும் சிறகுகளின் துணையால் இவ்வுலகம் மீது பறந்து திரியும் குகை வாசிக்கு மனச்சாந்தி ஏது?

4. என்னைப் பொறுத்தமட்டில் ஓயாது இடைவிடாது தேச சேவை செய்து அதன் மூலமாக மனித வர்க்கத்துக்குச் சேவை செய்வதே முக்தி நிலைக்கு மார்க்கமாகும்.

5. இந்தப் பிரபஞ்சத்தில் உயிர்பெற்றிருக்கும் எல்லாவற்றினுடனும் நான் என்னை ஐக்யப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

6. என்னை வெறுத்துத்தள்ளி பகைத்துக்கொண்டாலும் அவனிடம் அன்பு காட்டி அவனுக்குச் சேவை செய்ய நான் விரும்புகிறேன்.

7. என்னை நான் அறியவேண்டுமென்ற ஆசையால் துடிக்கிறேன். இந்த வாழ்விலேயே மோக்ஷத்தை அடைய வேண்டுமென்றும் தவங் கிடக்கிறேன்.

8. அழியக்கூடிய தன்மை வாய்ந்த இப்பூலோக சாம்ராஜ்யத்தில் எனக்கு விருப்பமே கிடையாது.

9. நான் செய்துவரும் தேசிய சேவை மோக்ஷமடைவதற்கான முயற்சியின் ஒரு பங்காகும்.

19. பிராம்மணன்.

1. பிரம்மத்தை அதாவது இறைவனை அடைவிக்கக் கூடிய தூய ஞானமே பிராம்மணீயம் என்று நான் கருது கின்றேன்.

2. பிராம்மணர்களென்போர் எல்லோரும் உண்மை யான பிராம்மணீயத்தின் பிரதிநிதிகளாக யில்லை.

3. சுய நலமற்று பிராம்மணன் வாழ வேண்டுமென் பது தூய நூல்களின் விதியாகும்.

4. உண்மை பிராம்மணீயத்திடமும், பிராம்மணர்க ளிடமும் எனக்கு மதிப்பு இருக்கின்றது

5. பிராம்மணர்கள் கீழ்நிலையடைந்தால் மற்ற ஏனைய வகுப்பு ஹிந்துக்களும் கீழ்நிலை யடைவார்கள்.

6. உண்மைப் பிராம்மணீயம் புத்துயிர் பெறுவிட் டால் ஹிந்துமதம் அழிந்துபோகும்.

20. அன்பு.

1. அன்பெனும் தர்மத்தை நமக்குக் கண்டுபிடித்துத் தந்த மகானுபாவன் உலகிலுள்ள எந்த விஞ்ஞான சாஸ்திரி யையும்விட மேம்பட்டவன்.

2. உங்கள் எதிரிகளை நீங்கள் அன்பினால் வெல் லுங்கள்.

3. அன்பினால் சகலமும் நிறைவேறுகின்றது.

4. மனதை அன்புநிலையில் நிறுத்த விசேஷ முயற்சியும், பயிற்சியும் வேண்டும்.

5. அன்பின் அற்புதங்களை நாம் காண முடியவில்லையென்றால் அதற்கு நாம் அதனை ஆராயாததே குறை.

6. அன்பைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, பேசப் பேச, எழுத எழுத, நான் வாழ்வின் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.

7. அன்பினால் எனக்கு மனச் சாந்தியுண்டாகின்றது. அற்புதங்களெல்லாம் எனக்குப் புலனாகின்றன.

8. அன்பைப்பற்றி வர்ணிக்க நான் அசக்தனாயிருக்கிறேன்.

9. எனது உடலின் ஒவ்வொரு நாடியிலும், நரம்பிலும், நான் அன்பையே பிணைக்க முயன்று வருகின்றேன்.

10. சத்தியத்தை நான் கண்டறிய வேண்டுமானால் என் உயிர் போவதாயினும் அன்பு நெறியையே கடைப்பிடிக்க வேண்டுமென நான் இளம் பிராயத்திலேயே உணர்ந்தேன்.

21. பிரும்மச்சரியம்.

1. ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவியையும் உணர்ச்சியை ஊட்டுவதான உறுப்புகள் அனைத்தையும் அடக்குவதே பிரும்மசர்யம்

2. பிரும்மசரியத்தை அனுஷ்டிப்பவர் ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி அவர்களைப் பாபங்கள் அணுகா. ஆதலால் அவர்கள் கடவுளுக்கு அருகாமையிலிருக்கின்றனர்.

3. பிரும்மத்தை அடைவதற்கோ அல்லது ஆத்மாவை அறிவதற்கோ சரியான மார்க்கம் பிரும்மசரியமே யாகும்.

4. உலகின் மகா அழகுடைய வனிதையின் உடலைத் தொடும்போதும் செத்துப்போன பிணத்தைத் தொடும் போதும் ஒரே விதமான உணர்ச்சி கொள்கின்றவனே சரியான பிரும்மசாரியாவான்.

5. புருஷனும், மனைவியும், பிரும்மசர்யத்தை அனுஷ்டிப்பதால் அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சிறந்த முறையில் ஊழியம் புரிந்துக்கொள்ளலாம்

6. வம்ச விருத்திக்காகக் குழந்தை பிறக்க வேண்டிய உத்தேசத்துடன் தவிர பிரும்மசரிய விரத அனுஷ்டானத்திற்குப் பங்க மிழைக்கவே கூடாது

7. பிரும்மசரியத்தை அனுஷ்டிப்பவன் தனது நாக்கை கட்டிப் போடவேண்டும்.

8. பிரும்மசரியத்தை நாடுபவன் அவ்வப்போது உபவாஸமிருந்து உடலைச் சுத்தி செய்துக்கொள்ள வேண்டும்

9. பிரும்மசரியானவன் நல்ல சகவாஸம், நல்ல நண்பர்கள், நல்ல புத்தகங்கள் இவற்றோடு உறவு பூண வேண்டும். அடுத்தாற்போல் அவனுக்குத் தெய்வ பக்தி வேண்டும்.

10. கடவுளுக்கென உலகில் சேவை செய்ய விரும்புபவர்கள் பிரும்மசரியத்தை ஏற்றுக்கொண்டு உலகத்தின் மினுமினுப்பான வாழ்க்கையைப் புறக்கணித்து வாழ்வார்கள்

22. ஆரோக்கியம் எது ?

1. புத்தியும், சரீரமும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுள்ளவைகளாக இருப்பதால் அவைகளில் எது கெட்டுப் போனாலும் மற்றதும் கெட்டுப் போய்விடும்.

2. காகிதத்தினால் செய்யப்பட்ட ரோஜா மலரை உண்மையான ரோஜா மலருக்கு நிகரானது என்று ஒருவரும் நினைக்கிறதில்லை. ஏன்? மலரின் சாரமாகிய வாசனையை காகிதப் புஷ்பத்தில் உண்டுபண்ண முடியவில்லை. அதுபோல் திட சரீரியாக இருக்கிற ஒருவனைக் காட்டிலும், நல்ல புத்தியும், உத்தம குணமுமுள்ளவனை நாம் மதிக்கிறோம்.

3. சரீரம் ஆத்மா ஆகிய இரண்டும் முக்கியந்தான் ஆனால் முந்தினதைவிடப் பிந்தினது அதிக முக்கியமானது.

4. எவனொருவனுடைய நடத்தையானது பரிசுத்தமாக யில்லையோ அவன் ஆரோக்கியமாக இருப்பவன் என்று சொல்ல முடியாது.

5. ஆரோக்கியத்திற்கு அஸ்திவாரம் பரிசுத்தமான நடத்தையே.

6. கெட்ட எண்ணங்களும், காமக்குரோதங்களும், வியாதியின் வெவ்வேறு ரூபங்களே.

7. நாம் ஆரோக்கிய முடையவர்களாக இராதிருப்பதற்கு முக்கியமான காரணம் நமது பெற்றோர்களே.

8. பூரண ஆரோக்கியமுள்ளவன் மரணத்திற்குப் பயப்படக் காரணமே யில்லை.

23. மனித சரீரம்.

1. இந்த உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களால் அமைந்திருக்கிறது. நமது உடலும் அப்படித்தான்

2. உடல் என்பது ஒரு சிறு உலகம். பஞ்ச பூதங்களும் நம் சரீரத்திற்கு அவசியமாக யிருக்கின்றன.

3. நமது உடலில் அதி முக்கியமான உடுப்பு வயிறு தான். ஒரே ஒரு க்ஷண நேரம் வயிறு தன்னுடைய வேலையை நிறுத்திவிடுமாயின் சரீரத்திற்கு ஆபத்து வந்துவிடும்.

4. வாயினால் மூச்சைவிட்டு மூச்சை இழுக்காமல் மூக்கினால் மட்டும் சுவாசிக்க வேண்டியது மிக முக்கியம்.

5. சரீரத்தின் வேலைகள் யாவும் இரத்த ஓட்டத்தைப் பொருத்திருக்கின்றன.

6. இரத்தம் சுத்தமாக இருப்பதற்கு முக்கியமான காரணக்கர்த்தா வாயுவே.

7. ரயிலில் பிணைக்கப்பட்டிருக்கும் புகை வண்டிக்கும் மற்ற வண்டிகளுக்கும் என்ன சம்பந்த மிருக்கிறதோ அதே சம்பந்தந்தான் வயிற்றுக்கும், உடலுக்கும்.

8. தன் சரீரத்தைப் பற்றிய முக்கியமான விஷயங்களை யாவது தெரிந்துக்கொள்ள வேண்டியது தன்னுடைய கடமை என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

9. நம்முடைய சரீரத்துக்கும், நமக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதுபோல் நமக்கும் வேறு எதற்கும் அவ்வளவு நெருங்கிய சம்பந்தமில்லை. ஆயினும் நம்முடைய சரீரத்தைப் பற்றி நாம் அசிரத்தையாக யிருக்கின்றோம்.

24. நாவடக்கம்.

1. எவனொருவன் தன்னுடைய நாக்கு உருசிகளை அடக்கிக் கொள்கின்றானோ அவனால் இந்திரிய நிக்ரஹம் செய்ய முடியும் என்பதை நான் அனுபவத்தில் கண்டிருக் கிறேன்.

2. நாக்குக்கு நன்றாயிருக்கிறதா இல்லையா என்று பாராது அது தேகத்திற்கு உகந்ததா என்பதை மட்டும் கருத வேண்டும்.

3. நாவடக்கம் என்பது பிரும்மசரியத்தைச் சேர்ந்தது.

4. அளவுக்கு மீறித்தின்றால் உடல் கெட்டுவிடுகின்றது. அதற்குப் பட்டினி கிடப்பது தான் சரியான மருந்து.

5. எந்த நல்ல உருசியான பண்டத்தையும் அதிகமாக உட்கொள்ளக் கூடாது.

6. எப்போதும் நாவையடக்கும் திறனுடைருக்க வேண்டும்.

7. நம்முடைய சரீரத்தையும், புலன்களையும் அடக்கி ஆளாமல் நம்மில் அநேகர் நாவுக்கு அடிமைகளாகி விடுகிறோம்.

8. மகா விரதங்களைக் கொஞ்சமாவது பிசகின்றி அனுஷ்டிப்பவனுக்கு உலகில் ஒன்றுமே தேவையில்லை.

9. மருந்தைச் சாப்பிடுவது போலவே உணவை அருந்த வேண்டும்.

10. சேவைக்குச் சிறந்த கருவியாக நமது உடலை வைத்திருக்க எத்தகைய ஆகாராதிகள் அவசியமோ அவை களை மட்டும் உண்பது நலம்.

25. உணவு.

1. மனிதன் சாப்பிடுகிறதற்காகப் பிறக்கவில்லை. சாப்பிடுகிறதற்காக அவன் உயிர் வாழவும் கூடாது.

2. கடமையைச் செய்ய சரீரம் அவசியமாக இருப்பதால் சாப்பிட வேண்டிய நிர்பந்த மேற்படுகிறது

3. சிருஷ்ட்டியில் ஏற்பட்டிருக்கிற விதிகளின் படி நாம் உண்டு வாழ்வோமாயின், பசியினால் இந்தப் பெரிய உலகில் எவனும் இறந்துவிடமாட்டான்.

4. பணக்காரர்கள் தேவைக்கு அதிகமாகச் சாப்பிடுகிற உணவெல்லாம் ஏழைகளின் வயிற்றுக்குப் போடாமல் அபகரிக்கப்பட்டதாகும்.

5. பட்சிகளையும், மிருகங்களையும் பாருங்கள் நாக்கு ருசிக்காக அவை சாப்பிடுகிறதேயில்லை. மூக்குப் பிடிக்க அவை தின்றுக்கொண்டே யிருக்கிறதில்லை.

6. வயிற்றுப் பூசையில் காலத்தைக் கழிக்கிற மனிதர்கள் பட்சிகளையும், மிருகங்களையும் விடத் தாழ்வான நிலைமையிலிருக்கிறவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

7. காப்பி, தேயிலை, கொக்கோ ஆகியவைகளுக்குப் பதிலாக கோதுமைமாவை வறுத்து உபயோகப்படுத்தலாம்.

8. மனிதன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய சத்துக்களெல்லாம் பழங்களிலிருக்கின்றன. அடுத்தபடியாக "சாக" ஆகாரம் சிறந்தது. "சாக" ஆகாரம் என்பது கீரைகள், கடலை, மொச்சை முதலிய நவதானியங்களாகும்.

9. அரிசியைவிட கோதுமையே சிறந்த ஆகாரமாகும்.

10. மனிதனுடைய சரீரத்தின் அமைப்பை ஜாக்ரதையுடன் பரிசோதனை செய்துப் பார்த்தால் மாமிசமானது சுபாவமாக மனிதனுக்கு ஏற்பட்ட ஆகாரமல்லவென்பது தெரியும்.

26. தேகப் பயிற்சி.

1. வாயுவும், நீரும், ஆகாரமும் எப்படி பிராணுதாரமான வஸ்துக்களோ அப்படியே கஸரத்தும் பிராணுதாரமானது.

2. கஸரத்து செய்யாததால் சரீரம் மெலிந்து போவது போல் புத்தியும் பலஹீனப்பட்டுப் போகிறது.

3. சரீரத்துக்கும், புத்திக்கும் பலத்தைக் கொடுப்பது தான் உத்தமமான கஸரத்து.

4. மூளை வேலையை மிதமிஞ்சிச்செய்து, சரீரத்துக்கு உழைப்பு ஏற்படுத்துகிறதேயில்லை அதனல் அவர்கள் சரீரங்கள் துர்பலமாகிவிடுகின்றன.

5. பந்தாட்ட முதலிய விளையாட்டுகளால் உண்டாகும் கஸரத்து போதுமானதல்ல.

6. தினந்தோறும் சில மணிநேரம் தோட்ட வேலை செய்ய வேண்டும்.

7. சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவத்துக்கும் நடையினுல கஸரத்து உண்டாகிறது.

8. நாம் வேகமாக நடக்கும் பொழுது சுவாஸப் பைகளுக்குள் சுத்த வாயுவை இழுத்துக் கொள்ளுகிறோம்.

9. சிருஷ்டியிலுள்ள ஆச்சரியங்கள் கண்ணில்படும்படி வயல்களிலும் காடுகளிலும் நடக்க வேண்டும்.

10. அஜீரணம் முதலிய வியாதிகளால் அவஸ்தைப் படுகிறவர்கள் நடந்துப் பார்க்கட்டும் அதன் பலனை அவர்களே தெரிந்துக் கொள்வார்கள்.

27. காற்று.

1. மனிதன் உயிர் வாழ்வதற்கு வாயுவும், ஜலமும், ஆகாரமும் இன்றியமையாதவை. அவற்றுள் வாயு மிக முக்யமானது.

2. ஆகையால்தான் அது எல்லோருக்கும் இனமாகக் கிடைக்கும்படி கடவுள் அதை ஏராளமாகப் படைத்திருக்கிறார்.

3. மனிதன் ஐந்து நிமிஷ நேரம் வாயுவின்றி ஜீவிக்க முடியாதென்று அனுபவத்தினால் அறிந்துக் கொண்டிருக்கிறோம்.

4. நூறு நோயாளிகளில் தொண்ணூற்றொன்பது பெயர்களுக்கு வியாதி உண்டானதற்குக் காரணம் அசுத்த வாயுவை பருகியதில் என்பது சந்தேகமில்லை.

5. வாயு சுத்தமாக இருக்கும்படி என்ன செய்ய வேண்டுமென்பதை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டியது முக்கியம்.

6. வாயுவை அசுத்தமாக்குவதில் நம்முடைய கக்கூசுகளே முக்கியமானவை.

7. கக்கூசில் ஒரு தகர டப்பியிலாவது ஒரு மண் சட்டியிலாவது சாம்பலோ காய்ந்த மண்ணோ வைத்திருக்க வேண்டும். கக்கூசுக்குள் யார் போனாலும் அவர் வெளியே வரும்பொழுது அவைகளைப்போட்டு மலத்தை மூடிவிட வேண்டும்.

8. மலஜலங் கழிக்க எங்கேனும் திறந்த வெளிக்குப் போனால் கையினாலோ காலினாலோ சிறு பள்ளந்தோண்டி அதில் மலத்தைக் கழித்து மூடி விடவேண்டும்.

9. வாயுவும், வெளிச்சமும் தாராளமாக நுழையும்படி நம்முடைய வீடுகளின் கதவுகளையும், ஜன்னல்களையும் எப்பொழுதும் நன்றாகத் திறந்து வைத்திருக்கவேண்டும்.

10. சுத்த வாயுவை நாம் சுவாசிக்கப் பழகிக்கொண்டால் பல கொடிய வியாதிகளிலிருந்து நம்மை நாம் காத்துக் கொள்ள முடியும்.

28. ஜலம்.

1. நமது சரீரத்தின் நிறையில் நூற்றுக்கு எழுபது பங்கு ஜலமிருப்பதுபோல் நமது உணவுப் பொருள்களிலும் நூற்றுக்கு எழுபது பங்கு தண்ணீர் இருக்கிறது.

2. நாம் சுவாசிக்கும் வாயுவினால் எப்படிக்கொள்ளை நோய்கள் உண்டாகின்றனவோ அப்படியே கெட்ட ஜலத்தை நாம் குடிப்பதாலும் கொள்ளை நோய்கள் உண்டாகின்றன.

3. அசுத்த ஜலத்தைக் குடிப்பதால் அநேகருக்கு மூத்திரப் பையில் நோய் உண்டாகி அவஸ்தைப்படுகிறார்கள்.

4. எந்த ஜலத்தில் ஜனங்கள் குளிக்கிறார்களோ அந்த ஜலத்தைக் குடிக்கிறதில்லை என்று விதி செய்துகொள்ள வேண்டும்.

5. எந்தக் கிணறு அல்லது குளம் அல்லது ஆற்றிலிருந்து ஜலம் கொண்டுவரப் படுகின்றதோ அவைகள் நல்ல ஸ்திதியில் இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

6. நீரிலுள்ள அசுத்தங்களை நீக்கும் பொருட்டு அதை நன்றாகக் காய்ச்சி மறுபடியும் குளிரச்செய்து அழுத்தமானதும் சுத்தமாக உள்ள துணியால் வடிகட்டி உட்கொள்ள வேண்டும்.

7. மழை ஜலந்தான் எல்லா ஜலத்திலும் பரமசுத்தமானது ஆனால் அது நம்மிடம் வந்து சேருவதற்குள் வாயு மண்டலத்திலுள்ள மிதக்கும் வஸ்துக்களின் சம்பந்தத்தினால் அசுத்தமாகிவிடுகிறது.

8. கடினமான நீரென்றும், மிருதுவான நீரென்றும் இருவகை நீர் இருப்பது அநேகருக்குத் தெரியாது. மிருதுவான நீரைக் குடிப்பதுதான் நல்லது.

9. கடினமான நீரைக் காய்ச்சி அரைமணி நேரம் வைத்திருந்தால் அது மிருதுவான நீராகிவிடும். பிறகு அதை வடிகட்டி உபயோகிக்கலாம்.

10. நம்முடைய சாதாரண உணவுப் பொருள்களிலேயே நீர் ஏராளமாக யிருக்கிறது. ஆகவே தாகம் அடங்குவதற்கு தேவையான நீர் தான் குடிக்கவேண்டும்.

29. ஜல சிகிச்சை.

1. இல்வாயு உபத்ரவத்தில் நீராவியை உபயோகப் படுத்தி பிறகு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதால் குண மேற்படும்.

2. மெழுகுகள், களிம்புகள் முதலியவைகளால் நிவர்த்தியாகாத கொப்புளங்களும் சிரங்குகளும் ஆவியின் பிரயோகத்தினுல் முற்றிலும் சொஸ்தமாகிவிடுகின்றன.

3. வயிற்றில் வலி அதிகமாக விருந்தால் முரட்டுத் துணி ஒன்றை இடுப்பில் கட்டிக்கொண்டு ஒரு சீசாவில் வெந்நீரை அடைத்து அதை இடுப்பின்மேல் வைத்துக்கொண்டால் வலி உடனே நிவர்த்தியாகிவிடும்,

4. மலபந்தத்தினுல் அவஸ்தைப்படுகிறவர்கள் படுத்துக்கொள்ளும்பொழுதோ அல்லது காலையில் எழுந்து பல் தேய்த்த உடனேயோ சிறிது வெந்நீரைக் குடித்துவிட்டால் இலகுவில் மல விசர்ஜனம் உண்டாகும்.

5. ஜ்வரம் வைசூரி, சர்ம வியாதிகள் தோன்றினுல் ஒரு துணியைக் குளிர்ந்த ஜலத்தில் நனைத்து வியாதியஸ்தன் மேலே போடுவதால் நல்லப் பிரயோசனம் உண்டாகும்.

6. பனிக்கட்டி உருகின ஜலத்தில் ஒரு துணியை நனைத்து தலையைச் சுற்றிக் கட்டினுல் மயக்கம், ஜன்னிப் பிதற்றல் ஆகியவைகள் உடனே தீரும்.

7. தகரத் தொட்டியில் குளிர்ந்த ஜலத்தைவிட்டு கால் களும், இடுப்புக்கு மேற்பட்ட பாகமும் தொட்டிக்கு வெளியிலிருக்கும்படி அமர்ந்து 5 நிமிஷம் முதல் 30 நிமிஷம் வரையில் ஸ்நானம் செய்தால் சகல வியாதிகளும் நிவர்த்தியாகும்.

30. மண் சிகிச்சை.

1. வியாதியைப் போக்கும் குணம் மண்ணுக்கு மிருக்கிறது நீருக்கு இருப்பதைவிட சில சமயங்களில் அதிக குணம் மண்ணுக்கு உண்டு.

2. அழுகும் பதார்த்தங்களின் மீது மண்ணைப்போட்டு விட்டால் வாயு கெட்டுப் போகிறதில்லை.

3. தேள் கொட்டினால் விஷத்தைப் போக்க மண்ணை உபயோகிப்பது நல்ல பலன் தருகின்றது என்று என்னுடைய அநுபவத்திலிருந்துச் சொல்லக்கூடும்.

4. வயிற்றின்மேல் மண்ணை இரண்டு மூன்று நாள் கட்டினதால் மலபந்தம், வயிற்றுகடுப்பு, தீராத வயிற்றுவலி முதலியவை தீர்ந்து விட்டன.

5 தலையைச்சுற்றி மண்ணைக் கட்டிக்கொண்டதால் தலைவலி உடனே தீர்ந்திருக்கிறது.

6. சீழ்வடியும் சிரங்குகள் தவிர மற்ற சிரங்கு, கடி, கொப்பளம், நெருப்பு சுட்டு விட்ட புண் முதலானவைகள் மீது மண் வைத்துக் கட்டினால் வியாதி நிவர்த்தியாகும்.

7. எல்லா மண்களும் ஒரே மாதிரிப் பிரயோஜனம் உண்டு பண்ணா. சுத்தமான இடத்திலிருந்து வெட்டி எடுத்தக் காய்ந்த மண்தான் அதிகப் பிரயோஜனம் தருவதா யிருக்கிறது.

31. ஜ்வரமும், சிகிச்சையும்.

1. குடல் கோளாறு அடைவதாலேயே எல்லா ஜ்வரங் களும் உண்டாகின்றன.

2. ஜ்வரமுள்ள நோயாளியைப் பட்டினி போட வேண்டியதே முதலில் செய்ய வேண்டிய காரியம்.

3. புலஹீனமானவன் பட்டினியால் பலஹீனமடைந்து விடுவான் என்று நினைப்பது தப்பு ஜ்வரத்தில் ஜீரணக் கருவிகள் மிகவும் துர்பலமாகின்றன நாக்கின் மேல் அழுக்குப்படிந்து விடுகிறது இந்த நிலைமையில் ஆகாரம் கொடுத்தால் ஜ்வரம்தான் விருத்தியாகும்.

4. லூயிகூனுடைய முறைப்படி தினம் இரண்டு தடவை ஸ்நானம் செய்ய வேண்டும்.

5. தலைவலி, வயிற்று வலியிருந்தால் மண் வைத்துக் கட்ட வேண்டும்.

6. எலுமிச்சம் பழச்சாற்றை வடிகட்டி வெந்நீருடனாவது, குளிர்ந்த ஜலத்திலாவது கலந்து நோயாளிக்குக் கலந்து கொடுக்க வேண்டும்.

7. பிறகு ஒரு ஸ்பூன் ஆலிவ் எண்ணெயுடன் ஒரு ஸ்பூன் எலுமிச்சம் பழ ரசத்தைக் கலந்து ஒரு வாழைப்பழத்தில் பாதியையாவது முழுமையுமாவது அதனுடன் கொடுக்கவேண்டும்.

8. காய்ச்சாத ஜலத்தைக் கொடுக்கவேகூடாது ஆடைகளைச் சுத்தமாக அடிக்கடி மாற்ற வேண்டும்.

9. ஜ்வரம் குறைந்தால் கோதுமைமாவு அல்லது அரிசிக் கஞ்சியை பாலில் சேர்த்துக் கொடுக்கலாம்.

10. மேலே சொன்ன முறைகளை மனப்பூர்வமாக கையாண்டால் ஜ்வரம் நீங்கி சொஸ்தமடையலாம்.

32. லாகிரி வஸ்துக்கள்

1. கள்ளு, சாராயம், வொயின்மீது எனக்கு எவ்வளவு வெறுப்பு இருக்கிறதோ அவ்வளவு வெறுப்பு சிகரெட்டுகள் மீதும் இருக்கின்றது.

2. சுருட்டு வகையறுக்கள் உபயோகிப்பது பெரும் பாவம். புத்தியையே அது கெடுத்துவிடுகின்றது.

3. லாகிரி வஸ்துக்களுக்கு நாம் அடிமைகளாகி விடுவதால் நம் உடல் கெட்டுப்போவதுடன் கூட, ஏராளமான தண்டச் செலவு மேற்படுகின்றது.

4. சுருட்டு முதலியவற்றைப் பிடிக்கிறவன் விஷத்தையே உட்கொள்ளுகிறான்.

5. புகைச்சுருட்டுக் குடிப்பதால் மனிதனுக்கு உண்டாகும் கெடுதிகள் எண்ணிறந்தவை யாகும்.

6. வழக்கமாகச் சுருட்டுக் குடிப்பவன் வெட்கம், மானம் என்பது இல்லாமல் அவைகட்கு அவன் அடிமைப் பட்டு விடுகிறான்.

7. மதுவால் உண்டாகும் மயக்கத்தைவிட புகையிலையின் மயக்கம் அதிக சூட்சுமமானது.

8. புகையிலையைப் பொடியாக மூக்கில் ஏற்றுவதையோ, வாயில் அடக்கிக்கொள்வதையோ, புகையாகக் குடிப்பதையோ நிறுத்திவிடாத மனிதன் பூரண ஆரோக்கியமுள்ளவனாக இருக்க முடியாது.

33. திருடாமை.

1. பிறருடைய பொருள்களை அபகரிப்பவன் திருடனுவதுப்போல தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்பவனும் திருடன் தான்.

2. தன் குழந்தைகளுக்குத் தெரியாமல் ஏதேனும் ஒன்றை மறைத்து வைத்திருந்துத் தின்னுகின்ற தந்தையும் ஒரு திருடன் தான்.

3. சொந்தக்காரர் யாரென்றுத் தெரியாமல் கீழேகிடக்கும் ஒரு சாமானை ஸ்வீகரித்து விடுவதும் திருட்டுத்தான்.

4. ஒருவர் உத்தரவின்றி அவர் கண் முன்பாகவே நாம் அச்சாமானை எடுத்துக் கொண்டாலும் அதைத் திருட்டு என்றே சொல்ல வேண்டும்.

5. ஒருவருடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஒரு சாமானை வாங்கிக்கொண்ட போதிலும் அச்சாமானுக்கு நம்மிடம் உபயோகம் ஏதும் இல்லாவிட்டால் அதையும் திருட்டு என்றே கூற வேண்டும்.

6. "திருடாமை" யின் தத்துவத்தைப் பின்பற்ற விரும்புபவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது தேவைகளையெல்லாம் சுருக்கிக் கொள்வான் இந்தச் சட்டத்தினின்று தவறியவர் பலர் உலகில் இருப்பதால் தான் உலகத்தில் தாங்கொணு வறுமை நிறைந்திருக்கின்றது.

7. பிறருடைய வஸ்துக்களை தன்னதாக்கிக் கொள்ளலாமென்று ஆசையோடு கண்களை செலுத்துவதை மனத்தால் நடத்தும் திருட்டு என்றே சொல்ல வேண்டும்.

8. எண்ணங்களைப் பிறரிடமிருந்து அபகரிப்பதும் திருட்டுத்தான்.

9. உலக சரித்திரத்தில் எத்தனையோ புலவர்கள் இலக்கியத் திருட்டு செய்திருக்கின்றனர். இது இப்போதும் சகஜமாய்த்தானிருக்கிறது.

10. ஆகவே திருடாமை என்ற உன்னத தத்துவத்தைப் பின்பற்ற வேண்டுபவன் அடக்கம் மிகுந்தவனாகவும், அறிவாளியாகவும், எச்சரிக்கையுடையோனாகவும், எளிமை வாழ்வை ஏற்றுக்கொண்டவனாகவும் இருத்தல் வேண்டும்.

34. அடக்கமுடைமை.

1. விநயம் என்பது ஓர் தனி நியமம் அன்று. அஹிம்சாதர்மத்தை அனுஷ்டிக்கும் ஒருவனுடைய உடம்போடு உடம்பாக விநயம் ஊறிப்போய்விடும்.

2. மனதிலே நிறைந்த வெறுப்பை அடக்கிக்கொண்டே ஒரு மனிதன் இன்னொருவனை அடிபணிந்து வணங்கலாம் இது விநயமல்ல.

3 நாள் முழுதும் ஜெபமாலையை உருட்டிக்கொண்டேயிருக்கலாம் எனினும் அவன் இதயத்திலே சுயநலம் நிரம்பிக் கிடக்குமானால் அவன் அடக்கம் இல்லாதவனாகின்றான்.

4. தனது விநயத்தைத்தானே அறியாதிருப்பவனே அடக்குமுள்ள மனிதன்.

5 விநயம் உடையவன் தன்னை ஒரு பொருளாக மதிப்பதில்லை மதித்தால் அகங்காரம் உண்டாகிவிடும்.

6 நம்மை ஒரு பொருளாக நாம் மதித்துக் கொள்ளுவோமானால் ஆண்டவனுக்கும் நமக்கும் இடையே ஓர் சுவர் எழும்பி விடுகின்றது.

7. தனது எந்த நற்குணத்தைப் பற்றியாவது செருக்குறும் மனிதன் ஜன சமூகத்துக்குச் சனியனாகின்றான்.

8. பிறருக்குச் சேவை புரிந்து வாழ வேண்டுமானால் விநய வாழ்க்கையையே நடத்த வேண்டும்.

9. மனித சமூகத்துக்குச் சேவை புரிவதிலேயே வாழ்க்கையை ஈடுபடுத்தி ஊக்கத்தோடு இடைவிடாது உழைத்தல் வேண்டும் அதுதான் உண்மையான விநயமாகும்.

10. தாமஸ குணத்தை விநயம் என்று நினைத்து விடலாகாது.

35. நம்பிக்கை.

1. பகுத்தறிவினால் ஒரு விஷயத்தைத் தெரிந்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்படும்போது நம்பிக்கையின் துணையினாலேதான் காரியஸித்தியடைய முயலவேண்டும்

2. பகுத்தறிவின் எல்லைதான் நம்பிக்கையின் ஆரம்ப ஸ்தானம்.

3. பகுத்தறிவு வண்டியில் பிரயாணம் செய்து அந்த வண்டி போக்குக்கு லாயக்கற்ற பிரதேசத்துக்கு வந்துவிட்ட பிறகு நம்பிக்கை யென்னும் வாகனத்தில் ஏறிச் செல்ல வேண்டும்.

4. பகுத்தறிவுக்கு எட்டாத விஷயத்தில் நம்பிக்கை வைப்பதானது குருட்டுத்தனமான நம்பிக்கையாகும்.

5. அனுபவம் எதேஷ்டமாக ஏற்பட்டிருக்கும் ஒருவர் கடவுள் இருக்கிறார் என்பதை ருஜுச்செய்துக் காட்ட முடியாமல் கடவுள் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை வைக்குமாறும் நம்பிக்கையுடன் கடவுளை வழிபடுமாறும் கூறுவாராகில் அதில் பிசகு ஒன்றுமில்லை.

6. உலக வாழ்க்கையில் நாம் சாதாரண மனிதர்களை நம்பத் தயாராக விருக்கும்போது இவ்வுலகில் தோன்றிய மஹா புருஷர்களும், குருமார்களும் சொன்ன உபதேசங்களைத்தானா நம்பக்கூடாது ?

7. மகான்கள் சத்தியத்தையும், அஹிம்ஸையையும் கடைப்பிடித்தொழுகினால் கடவுளைக் காணமுடியும் என்று சொன்ன உபதேசத்தில் நாம் ஏன் நம்பிக்கை வைக்கலாகாது ?

8. எந்த க்ஷணத்தில் மனிதர்களுடைய உள்ளத்தில் நம்பிக்கை என்னும் குணம் வற்றி உலர்ந்து விடுகிறதோ, அதே க்ஷணத்தில் இந்தப் பிரபஞ்சம் அசைவற்று நின்று அழிந்துபோகும்.

9. உத்தம புருஷர்கள் தவம் செய்தும், பிரார்த்தனை செய்தும், தூய வாழ்வு வாழ்ந்தும் கண்டறிந்த ஸத்திய ஞான மார்க்கத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும்.

10. ருஜு செய்துக் காட்டக்கூடிய விஷயங்களை ருஜு செய்துக் காட்டாமல் மூட நம்பிக்கை வைக்கச் சொன்னால் அது சாத்யப்படாது என்று சொல்லிவிடலாம்.

36. ஸமூக பகிஷ்காரம்.

1. ஸமூக பகிஷ்காரம் தொன்று தொட்டு இந்தியாவில் கையாளப்பட்டு வருவதாகும்.

2. ஜாதிகள் என்று தோன்றினவோ அன்றே ஸமூக பகிஷ்காரம் உண்டாகியது. விசேஷப் பலனுடன் அனுஷ்டிக்கப்படும் கடுமையான முறை இது ஒன்றுதான்.

3. ஸமூகத்தினரிடையே ஒரு ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே ஸமூகப் பகிஷ்காரம் அனுஷ்டிக்கப் படவேண்டும்.

4. ஸமூகப் பகிஷ்காரம் எவர்மீது அனுஷ்டிக்கின்றோமோ அவருக்கு தண்டனையாக யிருப்பதைவிட, அவர் மனக் கோட்பாடுகளை மாற்றி அவரை நம்முடைய வழிக்கு கொண்டுவரும் நோக்கத்துடனேயே உபயோகிக்கப் படவேண்டும்.

5. அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கத்தில் ஸமூகப் பகிஷ்காரத்தைக் கையாளுவதில் மனிதத் தன்மைக்கு வருத்தமான காரியம் எதையும் செய்யவே கூடாது.

6. ஒருவர் மிகவும் மன வேதனைப் பட்டே, இதர மார்க்கங்களெல்லாம் தீர்ந்து வேறு வழியில்லாமலேயே ஸமூகப் பகிஷ்காரத்தை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டதாக விருக்கவேண்டும்.

7. வைத்திய உதவி செய்ய மறுப்பதும், கிராமத்திலுள்ள ஒரே கிணற்றில் ஜலம் தூக்கக் கூடாது என்பதும் நியாயமான ஸமூக பகிஷ்கார மாகமாட்டா.

8. ஸமூகப் பகிஷ்காரமே கூடாது என்று நான் கூறவே யில்லை. ஹிம்சை, துன்பம் என எண்ணக்கூடிய வகையில் அதை உபயோகிக்கக்கூடாது என்றுதான் நான் சொல்லு கிறேன்.

9. ஒருவன் வெகு ஜன வாக்கை மீறி நடப்பானுனல் அவனைத் திருத்துவதற்காக அவனுக்குச் சில சௌகர்யங் களையும், உரிமைகளையும் அளிக்க சமூகத்தினர் மறுப்பது சரியானதே.

37. பெண்ணின் பெருமை.

1. ஆண்டவனுல் படைக்கப்பட்ட ஜீவராசிகளுள் மிக வும் உத்தமமானவள், பெண்.

2. ஸ்திரீகளை ஸ்வதந்திரமாக நடத்தும் விஷயம் ஆக் மார்த்த மானது.

3. பெண் புருஷனின் அடிமையல்ல. அவள் அவனது தோழி. அவன் உடலில் பாதி அவள்.

4. பெண்களுக்குப் பூரா சமத்வம் அளிக்கப்பட வேண்டுமென்பதே எனது கோரிக்கை.

5. நான் காணவிருக்கும் இந்தியாவில் பெண்களுக்கு ஸ்வதந்திரம் கட்டாயமாய் கிடைக்கும்.

6. என்னுடைய பிரம்மச்சர்ய விரதங் காரணமாக நான் என்னுடன் பல பெண்கள் சேவை செய்யும்படியான பாக்கி யத்தைப் பெற்றிருக்கிறேன்.

7. பெண்கள்மீது எனக்கென்னமோ இயற்கையாகவே ஒரு அன்பும், காருண்யமும், அனுதாபமும் இருந்து வரு கின்றது.

8 பெண்கள் தங்களது பாரம்பர்யப் பெருமையாகிய "இல்லரசி" என்ற பெயரைச் சிறிதும் விட்டுவிடக் கூடாது.

9. குழந்தைகளைச் சற்குண சம்பன்னர்களாக வளர்க்கும் பொறுப்பு பெண்ணினுடையதே.

10. பெண்கள் வீட்டையும், குழந்தைகளையும், தங்கள் கடமைகளையும் மறக்கக்கூடிய சமத்துவம் எனக்கு வேண்டாம்.

38. மணவினை.

1. விவாகமென்றால் இரண்டு சரீரங்களைப் பிணைத்து விடுவது மட்டுமல்ல. ஆத்மாக்கள் ஒன்றுபடுவதே விவாகமாகும்.

2. விவாகமென்றால் சரீர சம்பந்த மூலமாக உயிர்களைப் பிணைப்பதாகும்.

3. விவாகத்தால் ஏற்படும் காதல், தெய்வீகக் காதல் ஏற்படுவதற்கும் உலகத்தின்மீது காதல் ஏற்படுவதற்கும் வழிகாட்டியாகும்.

4. மிருக இச்சைக்காக விவாகம் நடப்பதாக ஸதி ஒருக்காலும் எண்ணமாட்டாள்.

5. தன்னலமற்ற சேவையைச் செய்வதற்கும் அகங்காரத்தை அடக்கிப் புருஷனோடு தன்மயமாவதற்கும் விவாகம் இன்றியமையாததாக எண்ணுவாள்.

6. தடபுடல் நிறைந்ததான இந்த உலகத்தில் நற்குணமும், இந்திரிய அடக்கமும் ஏற்படுவதற்கு விவாகம் அவசியமானதாயிருக்கின்றது.

7. கலியாணம் என்றால் என்னவென்று கூடத் தெரியாத குழந்தைப் பெண்களுக்குக் கலியாணம் செய்து வரும் கொடிய வழக்கத்தை நான் பலமாகக் கண்டிக்கிறேன்.

8. பாலியத்திலேயே பெண்கள் விதவைகளாகி விடுவதைக் கண்டால் என் மனம் அவதிப்படுகின்றது.

9. பால்யர்கள் 25 அல்லது 30 வயதாகும் வரையில் விவாகம் செய்துக் கொள்ளுகிறதில்லை யென்று பிரதிக்ஞை செய்துக்கொள்ள வேண்டும்.

10. என்னென்ன விஷயங்கள் மனைவிக்காகச் சொன்னேனோ அவை புருஷனுக்குமுண்டு தனது பக்தியையும், பரிவற்ற அன்பையும் எவ்வாறு புருஷனிடத்து மனைவி செலுத்துகிறாளோ அவ்வாறே அவனுமிருக்க வேண்டும்.

39. இல்லற வாழ்வு.

1. குடும்ப வாழ்க்கையின் மகிமை, அதன் ஒளி சிறிதும் குறையக்கூடாது. அதனிடமுள்ள புனிதத் தன்மை அழிதல் கூடாது.

2. தேச மக்களின் க்ஷேமம் குடும்பத்தையே பொறுத்திருக்கின்றது.

3. குடும்பப் பாரத்தை வகித்து நடத்துவதென்பது இந்தியாவில் மதக் கடமையாக விருந்து வருகின்றது.

4. இல்லறத்துக்குப் பாதுகாப்பு அளிக்காத எந்த அரசாங்கமும் இந்தியாவில் உயிர் பெற்றிருக்கமுடியாது.

5. இந்தியருக்கு இல்லற வாழ்வு பொக்கிஷத்தை விட மேலானது.

6. என்னைப் போன்ற ஒரு சிலர் வேண்டுமானால் ஒரு பெரிய காரியத்துக்காக, ஒரு மகத்தான கொள்கைக்காக வீடு, வாசல் எல்லாவற்றையும் விட்டொழித்து, குடும்ப வாழ்க்கையின் இன்பத்தையும் துறந்து, தியாகத்தையும், பிர்ம்மச்சர்யத்தையும் கட்டி யணைத்துக் கொண்டு வேலை செய்து வரலாம்

7. ஆனால் சாதாரண ஜனங்களுக்கு இல்வாழ்க்கையைக் காப்பது அவசியமானது.

40 குழந்தைகளைப் பழக்குதல்.

1. அன்புநெறியைக் குழந்தைகள் மூலமாய்ச் சுலபமாக அறிந்து உணரலாமென்பதையும் நான் கண்டு கொண்டேன்.

2. குழந்தைகளைக் கெடுத்து குட்டிச் சுவராக்குவது பெற்றோர்கள் தான். விஷமத்தனத்தோடு குழந்தைகள் பிறப்பதில்லை.

3. குழந்தைகள் பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னரும், வளர்ந்து வரும் பொழுதும் பெற்றோர்கள் ஒழுங்காக நடந்துக் கொண்டார்களானால் அதாவது ஒழுக்கமான வாழ்க்கையை நடத்துவார்களானால் குழந்தை தனது ஞான பூர்வமாகவே சத்திய வழியில் இறங்கும்.

4. "குழந்தைகள்" அவற்றிற்கு என்ன தெரியும் என்று நாம் அலக்ஷியமாகச் சொல்வதைப்போன்ற பைத்தியக் காரத்தனம் எதுவுமில்லை.

5. அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன் ஆயிரக்கணக்கான குழந்தைகளுடன் பழகிவிட்டுச் சொல்லுகிறேன். நம்

வாழ்க்கையின் உயர்ந்தப் பாடங்களை யெல்லாம் நாம் குழந்தைகளிடமிருந்தே கற்றுக்கொள்கிறோம்.

6. பயமுறுத்துவதும், அடிப்பதும் வயிறு கொண்டமட்டில் ஆகாரத்தைத் திணிப்பதும் குழந்தையின் அறிவைக் கெடுத்துவிடும்.

7. உத்தம வழிகளில் தங்களுடையக் குழந்தைகளைத் தயார் செய்ய வேண்டியது பெற்றோர்கள் கடமை. தாய் தகப்பன் மார்கள் நல்லக் கல்வியுள்ளவர்களாக யிருக்க வேண்டும்.

8. குழந்தைகள் யோக்யர்களும், உண்மைப்பேசுகிறவர்களுமாகும்படிப் பெற்றோர்கள் கற்பித்து வர வேண்டும்.

41. உடன் கட்டை ஏறுதல்.

1. கணவனிறந்தானென்று தன்னைத் தானே பலியிட்டுக் கொள்வது அறிவாகாது. அவ்வாறு செய்வது ஆத்மாவின் இரகஸ்யத்தை அறியாத மடமையாகும்.

2. மயானத்தில் புருஷனுடைய சிதையில் ஏறிப் படுத்துவிடுவது சதி தர்மமல்ல.

3. கணவன் தன்னைவிட்டுப் பிரிந்த பிறகு ஒவ்வொரு விநாடியும் பற்றற்ற வாழ்க்கையினாலும், தியாகத்தினாலும், துறவுத் தன்மையாலும், தன்னுடைய புருஷனுக்கும், அவனது குடும்பத்திற்கும், தாய் நாட்டிற்கும் சேவை செய்கின்றவள் தான் ஸதி

4. தன்னுடைய புருஷனின் கொள்கைகளும், தர்மங்களும் என்றென்றும் நிலவும்படிப் பாடுபட்டு அவனுடைய பெயர் சாகாது நிலை நிறுத்துபவளே சதியாவாள்

5. வெறுமனே தற்கொலை செய்துக் கொள்ளுவதால் ஸத்வத்தை அடைந்துவிட முடியாது விடாமல் உழைப்பத னாலும் ஆத்மாவைப் பலி கொடுப்பதனாலுமே அந்த ஸத்வ நிலையை அடைய முடியும்.

6. உடன் கட்டை யேறும் வழக்கததை ஒருவரும் பின்பற்ற வேண்டாம்

7. யாரைக் கல்யாணம் செய்துக் கொண்டாளோ அவனது ஆத்மா அழிவடைய வில்லை யென்றும், இன்னும் தன்னோடு இருப்பதாகவும் எண்ணுபவள், மறுமணத்தையும் கோரமாட்டாள்

8. மனைவி இறந்த வுடனேயே ஆடவன் மற்றொரு மனைவியைக் கட்டிக் கொள்ளுவதையும் கண்டால்என் உடல் நடுங்குகின்றது.

42. தேவதாசிகள்.

1. பொட்டுக்கட்டுதல் என்ற ஓர் துர் வழக்கம் காரண மாகப் புனிதமான பாரத தேசத்தில "தேவதாசிகள்" என்ற ஒரு வகுப்பினர் இருந்து வருகின்றனர்.

2. நியாயத்துக்கும், சன்மார்க்கத்துக்கும் விரோத மான ஒரு முறையில் மனிதன் தான் காம ஆசையை அனுப விக்க ஆயிரக்கணக்கான சகோதரிகள் வெட்கக் கரமான வாழ்வை நடத்திவர வேண்டிய கதியிலிருக்கின்றனர் என் பதை ஒவ்வொரு ஆடவனும் உணரட்டும்

3. இதில் மோசமான விஷயம் என்னவென்றால் தாசி கள் வீட்டையே கட்டிக்கொண்டு அழுபவர்களில் பலர் விவாகமானவர்களாயிருப்பது தான்.

4. அக்கினி சாக்ஷியாக பிரமாணஞ் செய்துக்கொண்ட தங்கள் சொந்த மனைவிகளுக் கிழைக்கும் பாவம் ஒன்று. தங்களுடன் பிறந்த சகோதரி போன்றவர்களின் பரிசுத்தத் தன்மையை பாதுகாக்காமல் "தாசிகள்" என்ற முறையில் அவர்களுக்கிழைக்கும் பாவம் மற்றொன்று.

5. ஒருவர் சொத்தைத் திருடுவது, ஒரு ஸ்திரீயின் மானத்தைக் கெடுப்பது இவை இரண்டில் சமூகத்துக்கு அதிகத் தீங்கிழைப்பது எது?

6. இவ்விஷயங்களைப் பற்றி விவாகமான, விவாக மாகாத ஒவ்வொரு வாலிபரும் ஆழ்ந்து யோசிக்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

7. இந்த சமூக நோயைக் குறித்து என் மனதிலுள்ள எண்ணங்களை யெல்லாம் நான் எழுத்தில் பொறிக்க முடிய வில்லை.

8. எழுதக்கூடியதை நான் எழுதிவிட்டேன் எழுதக் கூடாதனவற்றை மனிதனே சிந்தித்துப் பார்த்து தான் செய் யும் பாவத்துக்காக மனம் நொந்துக் கொள்ளட்டும்.

9. தாசி வீடு நாடுபவர்களைத் தடுக்க வேண்டியது ஒவ்வொரு ஆண் மகனுடைய கடமையாகும்.

43. கல்விப் பயிற்சி.

1. கல்விக்குச்சரியான அடிப்படை ஒழுக்கப்பயிற்சியே யாகும்.

2. உன்னத வாழ்வு நிலையில் உண்மைக் கல்வியானது பெற்றோர்களால் மட்டுமே அளிக்கப்படல் கூடும். வெளி உதவி குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும்.

3. இளைஞர்களில் ஒவ்வொருவருக்கும் உபயோகமான கைத்தொழில் ஒன்றைக் கல்வியோடு கற்பிக்க வேண்டுமென்பது என் உத்தேசம்.

4. குழந்தைகள் எப்போதும் கண்களினால் கற்றுக் கொள்வதை விட காதுகளின் வழியாய் அதிகம் கற்றுக் கொள்ளுகின்றன.

5. புஸ்தகங்களிலிருந்து கற்றுக்கொண்டவற்றை நினைவில் வைத்திருப்பது குழந்தைகளுக்கு நிரம்பப் பிரயாசையாகயிருக்கிறது.

6. வாய்மொழியாகக் கூறியவற்றை குழந்தைகள் வெகு சுலபமாகத்திருப்பிக் கூறுகிறார்கள்.

7. நமது குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்விப் பயிற்சியில் தன்னலம் கருதாமையை அவசியம் போதிக்க வேண்டும்.

8. அவலட்சணமான கையெழுத்தை, கல்விப் பயிற்சியில் குறைபாட்டுக்கு ஓர் அறிகுறியாகக் கொள்ள வேண்டும். நல்ல கையெழுத்து கல்வியின் ஓர் அவசியமான பகுதி என்பதை உணர்வார்களாக.

9. என்னுடைய உபாத்தியாயர்களிடமாவது பள்ளிக்கூடச் சிறுவர்களிடமாவது எப்போதேனும் பொய் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. காப்பி அடிக்கும் வித்தையும் கூடாது.

10. ஆசிரியரிடம் பல குறைகளிருப்பினும் ஆசிரியர் என்ற முறையில் அவரிடம் நான் வைத்திருந்த மரியாதை மட்டும் குறையவில்லை

44. ஹிந்தி.

1. தென் இந்தியாவில் எனது அன்புக்கு முற்றிலும் உரியவர்களாயிருப்பவர்கள் ஹிந்தியைக் கற்றுக்கொள்ளாவிடின் வேறு யாரை நான் கட்டாயப் படுத்த முடியும்

2. பொது மக்களுக்குச் சேவை செய்ய விரும்புபவன் கட்டாயம் ஹிந்தி கற்றுக் கொண்டேயாக வேண்டும.

3. என்னுடைய ஹிந்துஸ்தானி உருதுவுமன்று, ஹிந்தியுமன்று. இரண்டையும் சரியான அளவில் சேர்த்து சிருஷ்டிக்கப்படும் ஒரு பாஷையாகும்.

4. பிரிந்து நிற்காமல் ஒன்ருகச் சேர்ந்து ஒரே நதியாக ஆக வேண்டுமென்பதே ஹிந்துஸ்தானி பாஷா பிரசாரத்தின் நோக்கமாகும்.

5. இந்தியாவில் உயர்தரக் கல்வி முறையில் தாய் மொழியோடு கூட ஹிந்தி, சம்ஸ்கிருதம், பாரஸீகம், அரபு, ஆங்கிலம் இவ்வளவு மொழிகளுக்கும் இடமிருக்க வேண்டும், என்பது என் அபிப்பிராயம்.

6. இந்தப் பெரிய ஜாபிதாவைக் கண்டு மலேக்க வேண்டாம். இவ்வளவு மொழிகளேயும் கற்பது கஷ்டமன்று.

7. ஒரு மொழியை முறைப்படி கற்றுணர்ந்தவர் களுக்கு மற்ற மொழிகளேக் கற்பது மிக எளிதாகும்.

45. ஆசிரியர்களுக்கு.

1. பிள்ளேகளுக்கு உண்மையான பாட புத்தகம் உபாத்தியாயரே யாகும்.

2. பிள்ளைகளின் மீது புத்தகங்களை ஏராளமாய்ச் சுமத்துதல் அனுவசியமென்பது என் கருத்து.

3. நான் படித்த காலத்தில் என் உபாத்தியாயர்கள் புத்தகங்களிலிருந்து கற்பித்தது எதுவும் எனக்கு ஞாபக மில்லை. ஆனால் அவர்கள் வாய் மொழியாகக் கற்பித்தவை யெல்லாம் தெளிவாக ஞாபகத்திலிருக்கின்றன.

4. கூறும் விஷயத்தை மாணவர்களுக்குச் சுவை தரும்படி போதிக்க வேண்டும்.

5. இளைஞர்களின் கல்விப் பயிற்சியில் ஆன்மப் பயிற்சியும் முக்கிய அம்சமாக இருத்தல் வேண்டும்.

6. ஆன்மசாதன அப்பியாசமோ உபாத்தியாயரின் வாழ்க்கையும், ஒழுக்கத்தையும் முற்றும் பொறுத்த தொன்றாகும்.

7. உபாத்தியாயர்கள் பிள்ளைகளின் மத்தியில் இருக்கும்போதும் சரி, மற்ற வேளைகளிலும் சரி, தம்முடைய குணம், செயல் இவை குறித்து மிக எச்சரிக்கையாக யிருத்தல் வேண்டும்.

8. ஆசிரியன் பொய்யனாக இருந்தால் மாணவர்கள் மெய்பேசுமாறு கற்பிக்கமுடியுமா? கோழை ஆசிரியர் ஒருவர் தமது மாணவர்களை வீரர்களாக்குதல் ஒருக்காலும் இயலாத காரியம்.

9. உடல் தண்டனையே உதவாது என்பதே என்னுடைய உறுதியான அபிப்பிராய மாகும்.

10. மெய்யாகவே அவர்களுடைய உபாத்தியாயனுக வும், பாது காவலனுகவும், ஆகவேண்டுமானுல் ஆசிரியர்கள் மாணவர்களுடைய ஹிருதயங்களைக் கவர்ந்துவிட வேண்டும்.

46. மாணவர்கள்.

1. மாணவப் பருவம் என்ருல் விஷயங்களை யறிந்துக் கொள்ளும் பருவம் எனப் பொருள்.

2. மாணவரின் படிப்பு பள்ளிக்கூடத்தையோ, கல்லூரியையோ விட்டதும் முடிந்துவிட வில்லை.

3. மாணவப் பருவம் ஒவ்வொருவருக்கும் அவரவர் பள்ளிக்கூட வாழ்க்கையை முடித்துக் கொண்ட பின்பு தான் தொடங்குகின்றது என்பது என் அபிப்பிராயம்.

4. வெறும் புத்தகப் படிப்பு மாணவர்களது பிற்கால வாழ்க்கைக்குக் கொஞ்சம் கூடப் பயன் படவே படாது

5. கைக்குக் கிடைக்கும் புத்தகங்களை யெல்லாம் மாணவர்கள் படிக்கக்கூடாது.

6. தாங்கள் படிக்கும் புத்தகங்கள் சரியானவை தாஞ என்று மாணவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென நான் சொல்லுகிறேன்.

7. மாணவர்கள் குமஸ்தா வேலைக்காக படிப்பதை விட்டு, பிற்கால வாழ்க்கை தூய்மை யாவதற்கு படித்தல் வேண்டும்.

8. ஹிருதயங்களைப் பரிசுத்தப் படுத்திக்கொள்வதே மாணவரின் முதல் கடமை.

9. ஏக்கம், ஏமாற்றம், அதைர்யம், அச்சம், கர்வம், கோபம் என்பவை மாணவர் அகராதியிலிருக்கவே கூடாது

47. காங்கிரஸ்.

1. காங்கிரஸ் ஸ்தாபனம் தான் எல்லாருக்கும் பொதுவான ஒரு ஸ்தாபனம் என்று நான் தீர்மானித்திருக்கின்றேன்.

2. ஜாதிமத வித்யாசமின்றி இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் பொதுவானதும், மக்கள் பிரதி நிதியாக நிலவுவதும் காங்கிரஸ் ஒன்று தான்.

3. உலகத்திலுள்ள ஸ்தாபனங்களில் காங்கிரஸ் ஒன்று தான் வாழ்க்கையின் உண்மை ரகசியத்தை எடுத்துக் காட்டும் ஒரே வழியான உண்மை வழியை மக்களுக்கு போதிக்கத் தகுதி வாய்ந்தது.

4. அஹிம்சை, சத்தியம் ஆகிய வழிகளில் நடத்திச் செல்வதன் மூலமே காங்கிரஸ் இத்தேசத்துக்கும், உலக சமாதானத்துக்கும் உதவ முடியும்.

5. எவ்வளவோ எதிர்ப்புக்களுக் கிடையில் காங்கிரஸ் இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது. அது பலஹீனமடையாமல் சற்று பொறுமையைக் கடைப்பிடித்தால் சுதந்திரத்தைப் பெறும் சக்தியைப் பெற்றுவிடும்.

6. இந்தியாவின் நம்பிக்கைக்கும், எண்ணங்கட்கும் காங்கிரஸ் தான் இன்று நங்கூரமாயிருக்கிறது.

7. துரதிர்ஷ்ட வசமான நிலைமையிலும் பிற்போக்கான நிலையிலும் உள்ள தாழ்ந்த வகுப்பினருக்கும் காங்கிரஸ் மகாசபை பிரதிநிதியாக விருக்கிறது.

8. காங்கிரஸ் ஏற்பட்ட முதல் தேசீயத்தையே கடைப் பிடித்து அதற்காக உழைத்து வந்திருக்கிறது.

9. மெஜாரிடி பலத்தைக் கொண்டு காங்கிரஸ் ஆள விரும்பவில்லை. தேசம் பூராவிற்கும் சேவை செய்ய வேண்டு மென்பது தான் காங்கிரஸின் ஆவல்.

10. இந்திய சுதந்திர லக்ஷியத்தை ஆதரித்து அதற் காகப் பாடுபடும ஒவ்வொரு இந்தியருக்கும் காங்கிரஸின் கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

48. ஜனநாயக முறை எது?

1. பலாத்காரத்தின் மூலம் ஜனநாயகம் ஜீவிக்கும் வரையில் அதனுல் பலஹீனமுள்ளவர்களைக் காக்கவோ, ஆதரிக்கவோ முடியாது.

2. எளியவனுக்கும் பலவானுக்கும் ஒரேவித சந்தர்ப் பத்தை அளிக்க வல்லதே ஜனநாயகம்.

3. இன்று அமுலிலிருக்கும் மேனுட்டு ஜனநாயகத்தை ஒரு கலப்படமான நாஸிஸம், அல்லது பாஸிஸம் என்று தான் சொல்ல வேண்டும்.

4. பலாத்காரப் போராட்டங்களால் ஜனநாயகத்துக்கு பாதுகாப்பு ஏற்படாது.

5. இந்தியாவில் ஜனநாயகமுறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரே ஒரு ஸ்தாபனம் தான் உண்டு அது தான் காங்கிரஸ்.

6. கட்டாயப் படுத்தி, துன்புறுத்தி நாம் ஒருவரைப் பரிசுத்தப் படுத்தக்கூடாது. அது ஜனநாயகத்துக்கு விரோத மானது.

49. சீமையில் சேவாக்கிராம முனிவர் பேச்சு.

1. சுதேச மன்னர்கள் ஒத்துழைக்கத் தயாராக யிருப் பதைப் போற்றுகிறேன் அவர்களுக்கும் இந்திய ரத்தம் ஓடுகிறதல்லவா?

2. நாட்டின் அரசாட்சியை நடத்துவதில் பணக்கார னுக்கு மட்டும் ஓட்டுரிமை உண்டென்றும், தொழிலாளிக்கு அவ்வுரிமை கிடைப்பது துர்பலமெனவும் இருக்குமாயின் அதை நான் எதிர்த்தே தீருவேன்.

3. எல்லா மக்களும் படித்தவர்களா யிருக்க வேண்டு மென்ற ஆசை எனக்குண்டு. ஆனால் அதற்காக ஜீவதார மான ஓட்டுரிமையைக் காக்க வைக்க நான் விரும்ப வில்லை.

4. காங்கிரஸ் மகாசபை எவ்வாறு தேர்தலை நடத்து கிறதோ அது தான் சிறந்த முறை. இத்தகைய முறைக்கு துப்பாக்கியின் உதவி தேவையில்லை அன்பு தான் அவசியம்.

5. சட்ட சபைகளில் சில அங்கத்தினர்களைத் துரைத் தனம் நியமனம் செய்வதை நான் எதிர்க்கின்றேன். அவர் கள் கெட்டிக்காரர்களாக யிருந்தால், தங்கள் அபிப்பிரா யத்தை மட்டும் பெறுவதுடன் விலகிக்கொள்ள வேண்டுமே யன்றி அதற்குமேல் அவர்கட்கு அதிகாரம் தரலாகாது.

6. கிராமத்தானுக்காக வாதிக்கவே நான் இங்கு வந்திருக்கிறேன். இந்திய ஏழை மக்களின் கடைசீச் சொட்டு இரத்தத்தைப் பிறர் உறிஞ்சுவதைக் காண என்னால் சகிக்கக் கூட வில்லை இந்த அநீதியை அகற்றவே அன்னிய ஆடை விலக்கை அனுஷ்டிக்கின்றேன்.

7. இந்தியாவில் அன்னிய ஆடை பகிஷ்காரம் நடத்தப் படுவது நியாயமானது. ஏனெனில் 100-க்கு 85 கிராம வாசிகள் வேலையின்றி பட்டினி கிடக்கின்றார்கள்.

8. இந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலையையும், சணலையும் அன்னிய நாடுகள் பகிஷ்கரித்தாலென்ன ஆகும் என்று கேட்கின்றீர்கள். வேண்டாதவரின் கழுத்தில் தனது சரக்குகளைத் திணிப்பதற்கு இந்தியா தயாராகயில்லை.

9. அவசியமானால் இந்தியா மற்றொருப் போராட்டத் துக்கும் தயார்! அதிகத் தியாகம் செய்யவும் தயார்! சுதந் திரம் கிடைப்பதாயின் எந்த தியாகத்துக்கும் தயாரென்பதை பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் உணர வேண்டுகிறேன்.

10. இந்தியா சுதந்திரம் அடைந்தால் குடிசைத் தொழில்கள் சங்கிலிபோல் நியமிக்கப் படுமென நான் நம்பு கிறேன்.

50. லங்காஷயர் தொழிலாளர் முன்.

1. உங்கள் ஊரில் முப்பது லக்ஷம் பேர்கள் வேலை யில்லாது தவிக்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ முப்பது கோடி மக்களுக்கு வருஷத்தில் ஆறுமாதங்களும் வேலையில்லை வயிற்றுக்குக் கஞ்சியில்லை. இந்தத் துன்பத்தை உலகம் எவ் வளவு காலத்துக்குச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறது.

2. இந்தியர்கள் நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறார்கள். கடவுளிடமிருந்த நம்பிக்கையும் போய்க் கொண்டிருக்கின்றது.

3. இங்கு அதோ ஓடிக் கொண்டிருக்கின்றதே அந்த நாயிடம் வேண்டுமானாலும் நான் கடவுளைப்பற்றிப் பேசலாம். இந்திய ஏழை மக்களிடம் எப்படிப் பேச முடியும்?

4. வயிறு காய்பவர்களிடம் போய் கடவுளைப்பற்றி என்னமாகப் பேசுவது?

5. அவர்கள் கண்கள் குழி விழுந்து கிடக்கின்றனர். ஒளி கிடையாது. தேஜஸ் கிடையாது. கஞ்சி தான் அவர்களுக்குக் கடவுள்.

6. கஞ்சியை அவர்கள் கண்ணுக்குக் காட்டினால் தான் அவர்கள் கடவுள் இருப்பதை நம்புவார்கள்.

7. காய்ந்து கிடக்கும் தங்கள் வயிறுகளைக் காட்டி இந்தியாவின் கோடிக்கணக்கான ஏழைகள் உங்கள் கதவுகளை தட்டுகையில் நீங்கள் சும்மா யிருக்க முடியுமா?

8. இந்தியர்கள் துயரத்துக்கு உங்கள் துயரம் எந்த மூலை?

9. இந்திய ஏழைகளின் பிணங்களின் மீது நீங்கள் கொழுக்க எண்ணுகிறீர்கள்.

10. ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து அவர்களை வயிற்றிலடித்து நீங்கள் பிழைப்பு தேடாதீர்கள். வேண்டாம் அது பாவத் தொழில்.

51. கைராட்டினம்.

1. என்னிடம் ஏதேனும் உபதேசம் கேட்டால் சுய ராஜ்யத்திற்காக சுழற்றுங்கள் இராட்டையை என்பது தான் உபதேசமாகும்.

2. மனப்பூர்வமான இன வொற்றுமையும் வீடுகள் தோறும் இராட்டைகள் சுழல்வதுமே எனது அரசியல் தத்துவம்.

3. இரத்தக் கிளர்ச்சியினின்றும், அரசியல் பொருளாதாரக் கட்டினின்றும் தேசத்தை விடுதலை செய்ய நான் இராட்டையையே நம்பி இருக்கிறேன்.

4. தேசம் சாதனை சித்தத்துடன் ராட்டையைக் கையாளுமாகில் கடைசீ மில் அடைபடும் வரையில் ராட்டை சுழன்று கொண்டே தானிருக்கும்.

5. தேசத்தொண்டுக்கு இராட்டை தான் உரைகல்.

6. வேறுஎந்த கிராமக் கைத்தொழிலும் நூல் நூற்றல் தொழிலுக்கு இணையாகாது.

7. இராட்டையின் சிறப்பினை யுணர்ந்தோர்க்குத் தான் இந்நாட்டின் தரித்திரத்தைப் போக்க அதைவிட வேறு சாதனமில்லை என்று நான் ஓயாமல் வாய்விட்டு அலறி வருவதன் பொருள் விளங்கும்

8. பொறுமை, சாந்தம், தொழில்பழக்கம், எளிய வாழ்க்கை முதலிய நற்குணங்களை ராட்டினம் போதிக்கின்றது.

9. கதர் பொருளாதாரத்தின் தத்துவம் பருத்தி விளை விப்பதிலிருந்து துணியாக நெய்வது வரைக்கும் அந்தந்தக் கிராமத்திலேயே தான் செய்யப்பட வேண்டும். அத்துணியை அங்கேயே செலவும் செய்ய வேண்டும்.

10. பஞ்சாபில் நூற்ற நூலை, பம்பாயில், நெய்து, மலையாளத்தில் விற்பது என்ற கதர் உற்பத்தி முறை பெருந் தவறு

52. கதர்.

1. எந்த உதவியால் பட்டினிகிடக்கும் ஏழைகளுக்குக் கஞ்சி கிடைக்கும்? எந்த உதவியை எளிதில் செய்ய முடியும் என்று நான் யோசித்துப் பார்த்தேன். அந்த உதவி தான் கதர், ராட்டை, என்று நான் கண்டு கொண்டேன்.

2. கதரின் மூலமாக சுதேசியத்தைப் பின் பற்றுவதால் அந்நியத் துணி ஆலைக்காரர்களுக்குத் தீங்கு ஏற்படும் என்று எண்ண வேண்டாம்.

3. கதரைக் கட்டிக் கொள்வதால் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய முதல் கடமையை ஆற்றியவராகின்றோம்.

4. அத்தாட்சி யில்லாதக் கதரை உபயோகிப்பவரும், அதை வியாபாரம் செய்பவரும் அகில பாரத சர்கா சங்கம் கைதூக்கி விட முயற்சிக்கும் நூற்பவர்களையும், நெசவாளி களையும் சுரண்டி வருகிறார்களென்று நான் பன்முறையும் சொல்ல முடியும்.

5. கிராமாந்திரங்களிலே வசிக்கும் நமது ஏழை சகோதர சகோதரிகளால் உற்பத்தி செய்யப்படும் கதர்

ஆடைகளால் நமது மானத்தைப் போற்றிக் கொள்வதை விட நமக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது?

6. கதர் நம்வாழ்வில் ஸ்திரப்பட்டுப் போனால் யாவும் சரியாகிவிடும் கதரின் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் உங்களது அறிவையும் உழைப்பையும் செல விடுங்கள்.

7. கதர் சாஸ்திரத்தின் அபிவிருத்தி மூலம் கிராம வாசிகளுக்கு உணவும் உழைப்பும் அளித்து அதன் ஆதிக்கத்தைச் சமாளிக்க வேண்டும்.

8. உள்நாட்டு ஆலைத்துணி கதருக்குச் சமானமென்றும் அதுமலிவாக யிருப்பதால் கதரை விட சிறந்த சுதேசி யென்றும் சிலர் கருதுகின்றனர் அது மிகவும் பிசகு.

9. கோடிக்கணக்கான மக்களைப் பட்டினிபோடும் ஆலைத்துணி எவ்வளவு மலிவாக யிருந்தாலும் அதை மலிவெனக் கருத முடியாது.

10. பஞ்சப் பிரதேச மக்களுக்கு எவ்விதக் கஷ்ட நஷ்டங்களுமின்றி கதர் ஓர் அன்ன பூர்ணியாய் விளங்கி வேலையும் கொடுத்துதவும்.

53. சுதேசி தர்மம்.

1. தற்காலம் நமது ஸ்வதர்மம் எது? அது தான் ஸ்வதேசியம்.

2. சுதேசிய தர்மத்தை அனுஷ்டிப்பவன் அருகிலிருப்பவரின் சேவைக்குத் தன்னை அர்ப்பணம் செய்துக் கொள்வான்.

3. சுற்றிலும் உள்ளவர்களுக்குப் பணி செய்வதே ஸ்வதேசியாகும்.

4. சுதேசிய தர்மத்தை அனுஷ்டிப்பவன் உலக நன்மைக்காக தன் குடும்பத்தைத் தியாகம் செய்ய நேர்ந்தாலும் நேரலாம்.

5. சுதேசிய தர்மத்தில் சுயநலத்திற்கிடமில்லை. அப்படி ஏதாவது சுயநல மிருந்தாலும் அது உன்னதமான சுயநலமாகும்.

6. உலக ஊழியத்தின் சிகரமே உண்மையான ஸ்வதேசியம்

7. ஸ்வதேசிய பக்தன் உள்ளூர்ப் பண்டங்களையே வாங்குவான்.

8. சுத்த சுதேசித் தொண்டன் அன்னியனிடத்துக் கெட்ட எண்ணம் கொள்ளமாட்டான். உலகத்தில் ஒருவரையும் பகைத்துக் கொள்ளான்.

9. சுதேசியம் என்பது வெறுப்பிலிருந்து உதிப்பதல்ல அது தன்னலம் நீங்கிய தொண்டாகும். அஹிம்சையும், அன்பும் அதன் வேர்களாகும்.

54. மதுவிலக்கு.

1. மதுபானம் செய்வது கெட்ட வழக்கம் மாத்திரமல்ல. அதை ஒரு வியாதி என்றே சொல்ல வேண்டும்

2. நோயாளிகள் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்வதை நாம் தடுப்பது போல் குடிகாரனையும் நாம் தடுக்க வேண்டும்.

3. பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக அரசாங்கம் மது விற்பனையை ஆதரிக்குமானல் நாம் மறியல் செய்வதும் அவசியமாகிறது.

4. இந்திய நாட்டுக்கு ஸர்வாதிகாரியாக என்னை ஒரு மணி நேரம் நியமித்தால் எல்லாக் கள்ளுக்கடைகளையும் மூடுவது தான் எனது முதல் வேலை.

5. மலேரியா முதலான நோய்கள் உடலை மட்டும் கெடுக்கும் ஆனல் மதுபானம் உடலையும், ஆத்மாவையும் கெடுத்து அழிக்கும்.

6. ஏழை மக்களைக் குடிக்க வைத்து நாசமாகும்படி செய்து பெறும் வரிப்பணம் நஷ்டமாவதை மதுவிலக்கால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு ஈடு செய்து விடலாம்.

7. மதுபானத்தை விலக்கும் சமயத்திலேயே அதற்குப் பதிலாக உபயோகிக்க வேண்டிய பானங்களை கொடுக்க வேண்டும். அதனல் மதுபானம் செய்து வந்தவர்களுக்கு ஆரோக்கியமும், சாந்தியும் கிடைக்கும்.

55. தீண்டாமை.

1. பஞ்சமர்களை நாம் தாழ்த்திவிட்டதின் மூலமாக நம்மையே நாம் தாழ்த்திக் கொண்டிருக்கிறேம்.

2. நாம் ஒரு வகுப்பினரைத் தாழ்த்தியதால் பிறர் நம்மைத் தாழ்த்தும்படி கடவுள் ஆக்ஞாபித்து விட்டார்.

3. தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் பகுதியல்ல. ஹிந்து மதத்தின் நற்பெயரை அது கெடுத்து வருகின்றது.

4. தீண்டாமையைப் பற்றி ஒவ்வொரு ஹிந்துவும் வெட்கிக்க வேண்டுவதாக இருக்கின்றது.

5. அறிவு விசாலமும், மக்களிடையே விழிப்பும், ஸ்வராஜ்ய உணர்ச்சியும் ஏற்பட்டுள்ள இக்காலததில் தீண்டாமைக் கொடுமையை நாம் சகித்துக் கொண்டிருப்பது சாத்யமல்ல.

6. தீண்டாமையை ஒழிக்கவில்லையேல் ஸ்வராஜ்யம் கிடையாது.

7 ஹிந்துக்கள் மனம்வைத்தால் இந்தத் தீண்டாமைப் பேயை உடனே அடித்து விரட்ட முடியாதா ?

8. பகவத்கீதை, வேதங்கள், உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ள ஹிந்து மதத்திலும், சங்கரரையும் ராமாநுஜரையும் குரு தெய்வங்களாகவும், கொண்ட ஹிந்து மதத்திலும் தீண்டாமைக்கு இடமே கிடையாது.

9. எவ்வளவு தாழ்ந்தவனுக யிருப்பினும் அவன் அருகில் வரக்கூடாது என்று ஹிந்து மதம் கூறவே யில்லை.

10. மனிதர்களை எப்பொழுது நாம் விலக்கித் தள்ளி யிருக்கிரேமோ அப்பொழுது ஆண்டவனையும் நாம் விலக்கியே இருக்கிரேம். ஆகவே இன்று ஆண்டவனும் தீண்டாதவனே.

56. ஒத்துழையாமை.

1. ஒத்துழையாமையால் இந்தியாவுக்கு எண்ணற்ற நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன

2. பல முறைகளில் ஏற்பட முடியாத ஒரு விழிப்பை ஒத்துழையாமை பாமர மக்களிடையே இக்குறுகிய காலத்தில் ஏற்படுத்தி யிருக்கிறது

3. அராஜகத்தையும், ரத்தம் சிந்துதலையும், தடுத்து நமக்கும் பிரிட்டிஷாருக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்தி யது ஒத்துழையாமையே.

4. ஒத்துழையாமை முற்றிலும் அஹிம்சையின் வழியே நடைபெறுதிருந்தும் இத்தகைய நலன்கள் அதி னின்றும் விளைந்திருக்கின்றன.

5. ஒத்துழையாமையை உலகெங்கும் கையாள முடி யும் என்றே நான் கருதுகிறேன்.

6. ஒத்துழையாமையை சரிவரக் கையாண்டால் அரசி யல் துறையில் கையாளப்படும் மிருகத்தனமாய் நாசத்தை விளைவிக்கும் ஆயுதங்களை ஒழித்து விட முடியும்.

7. ஒத்துழையாமையை எந்தவரம்புகளுக்கு உட்பட்டு நடத்த வேண்டும் என்பதில் மட்டும் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

8. ஒத்துழையாமையை அநியாயமாக எவனாவது கையாண்டால் அது இறுதியில் அவனுக்கே துன்பத்தை விளைவிக்கும்.

9. எதிரிக்கு எத்தகைய துன்பமும் ஏற்படாதது தான் ஒத்துழையாமையிலுள்ள பாதுகாப்பான அம்சம்.

10. அரசியலில் ஒத்துழையாமையும், சட்ட மறுப்பும் இல்லாவிட்டால் யாதொரு பயனுமில்லை யென்பதை நாம் பார்த்தாய் விட்டது.

57. வகுப்புத் தொல்லைகள்.

1. வகுப்புச் சண்டையைத் தீர்த்துக் கொண்டால் தான் ராஜீயப் பிரச்னையில் இறங்கலாம் என்று சொல்வது முழுத்தவறு.

2. இப்படிச் சொல்வதால் தான் ஒவ்வொரு வகுப்பினரும் தங்களுக்கு வேண்டியதையெல்லாம், எதை வேண்டுமானாலும், எவ்வளவு அதிகம் வேண்டுமானாலும் கேட்கும் பேரத்திலிறங்கி யிருக்கிறார்கள்.

3. ஒன்றுமில்லாத வகுப்புப் பிரச்னையைப் பிரமாதமாக்கியதால் சமரசத்தைப்பற்றி வாயெடுத்துப் பேசுவது கூட இப்பொழுது முன்னிலும் கஷ்டமாக விருக்கின்றது.

4. ஏற்கனவே பிரிட்டிஷார் எவ்வளவோ முட்டுக்கட்டைகளைப் போட்டாய் விட்டது. ராஜீயப் பிரச்னையைத் தீர்க்கு முன்னர் வகுப்புப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வது தவறு.

5. வகுப்புப் பிரச்னை தீர்க்கப் பட்டாலும் சரி, தீர்க்கப் படாவிடினும் சரி இந்தியா ஸ்வதந்திரம் அடைந்த பின் நாங்கள் கஷ்டப்பட வேண்டி யிருக்கலாம். ஆனால் இதற்காக ஸ்வதந்திரத்தைக்கொடுக்காமல் வைத்துக்கொள்ள முடியாது.

6. நாம் ஸ்வதந்திரத்துக்கான விலையைக் கொடுக்காமல், போதுமான அளவு தியாகம் செய்யாமலிருந்தால், வகுப்புப் பிரச்னை திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டால் கூடப் பிரயோசனமில்லை.

58. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

1. மற்றவர்களுக்கு இந்தியாவில் உள்ள சொந்தம் முஸ்லீம்களுக்கு மிருக்கிறது.

2. கெட்ட காரியம் செய்யக்கூடிய இந்து அல்லது முஸ்லீமைக் குறித்து வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

3. நம்முடைய பலஹீனத்தின் அறி குறியால் இந்து முஸ்லீம்களாகிய நாம் சுயராஜ்யத்துக்கு தகுதியற்றதோடு நம்முடைய சமாதானத்திற்கு அன்னிய அரசாங்க சட்டத்திடமும் துப்பாக்கி முனையினிடமும் போக வேண்டியிருக்கிறது

4. முஸ்லீம்கள் நியாயமான கோரிக்கைகளை முடிவாகக் கேட்பதிலிருந்து தான் ஒற்றுமை ஜனிக்கக்கூடும்.

5. நியாயமாகவோ அநியாயமாகவோ கோரிக்கைகளை நீட்டிக்கொண்டே போவதானல் ஒற்றுமை ஏற்படவே போவதில்லை.

6. இந்தியாவைப் பங்கு பிரிக்கும் யோசனையால் தற்சமயம் ஒற்றுமைக்கு இடமே இல்லாது போயிற்று.

7. சுயநிர்ணய உரிமை என்பதில் ஒவ்வொரு வகுப்புக்கும், ஒவ்வொரு தனி நபருக்கும் அவ்வுரிமையுண்டென்பது அடங்கிக் கிடக்கிறது.

8. நமக்குள் சண்டை போட்டுக்கொண்டு அன்னிய ஆட்சிக்கு உட்பட்டுகிடக்கும் நிலைமை நீடித்திருக்கமுடியாது.

9. நான் எல்லாம் நன்மைக்கே என்று எண்ணும் சுபாவமுடையவன், சமயம் நேரும்போது ஹிந்துக்கள், முஸ்லீம்கள் இதரர்கள் எல்லோரும் ஒன்று சேருவார்கள் என்ற நம்பிக்கை என்னுள் பலமாக விருக்கிறது.

10. இந்து முஸ்லீம் சமரசமின்றி ஸ்வராஜ்யமில்லை யென இன்னும் நான் நம்புகிறேன். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே கடவுள் வித்தியாசம் செய்ய வில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

59. மதமும் ராஜீயமும்.

1. எனக்கு மதமும், ராஜீயமும் ஒன்று தான்.

2. மதமில்லாத ராஜீயத்தை நான் வெறுத்துத் தள்ளு கிறேன்.

3. மதத்தைக் கைவிட்ட ராஜீயம் மரணக் கூண்டுக் குச் சமமாகும்.

4. சத்தியத்தில் எனக்குள்ள பற்று என்னை அரசியல் துறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

5. சமயத்துக்கும், அரசியலுக்கும் சம்பந்தமில்லை யென்று கூறுவோர் சமயத்தைப்பற்றி ஒன்றுமறியார் என்று நான் தாழ்மையுடன் ஆனால் சிறிதும் தயக்கமின்றிக் கூறுவேன்.

6. ஆத்மத்தூய்மை செய்து கொள்ளாத வரையில் உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினிடத்தும் தன்னை ஒன்று படுத்திக் கொள்ளுதல் இயலாத காரியம்.

60 தியாகமூர்த்தி திலகர்

1. முன்னர் பூத உடலுடன் திகழ்ந்த திலகர் இன்று ஒவ்வொரு இந்தியனின் மனக்கோவிலிலும் குடி கொண்டிருக்கின்ருர்.

2. "ஸ்வராஜ்யமே நமது பிறப்புரிமை, நாம் அதை அடைந்தே தீருவோம்" என்ற மந்திரத்தை நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் வரையில் திலகர் நம்மிடையே வாழ்வார்.

3. மனிதரிலெல்லாம் உத்தமராக திலகர் விளங்கினர் உயிர் போகுமளவும் தேச விடுதலைக்காகச் சலியாது சமர் புரிந்தார்.

4. "ஸ்வராஜ்ய மில்லாத வாழ்வைவிட சாவதே மேல்" என்ற வீரகர்ஜனையுடன் இந்நாட்டிலே ஸ்வராஜ்ய விதையை விதைத்தவர் திலகர் தான்.

5. தேசாபிமானத்தைத் தவிர அவருக்கு வேறு மதம் தெரியாது. ஜனநாயகம் என உரைத்துக் கொண்டே அவர் இவ்வுலகில் ஜனித்ததாகவும் கூறலாம்.

6. லோகமான்யரைப் போன்று ஸ்வராஜ்ய மந்திரத்தைப் பரப்பியவர் இந்நாட்டில் எவருமில்லை.

7. அதைரியம் என்பதே அவரது அகராதியில் கிடையாது.

8. இந்தியாவுக்குச் சமத்துவம் வழங்கப்பட வேண்டுமென்றே அவர் அலறினர் எவருடைய தயவையும் எதிர்ப்பாராது அவர் விடுதலைப்போரை நடத்தினர்.

9. நமக்காகவே பிறந்து, நமக்காகவே வாழ்ந்து, நமக்காகவே பெருந்துயரெலாம் பட்டு நமக்காகவே உயிர் நீத்த லோக மான்யரை நாம் அனுதினமும் பூஜிப்போமாக.

10. அவரது இணையிலா தீரத்தையும், சலியா உழைப்பையும், எளிய வாழ்க்கையையும் தேசப்பற்றையும் அனுஷ்டிப்பது தான் திலகரை நாம் உண்மையில் பூஜிப்பதாகும்.

61. மிருக பலம்.

1. மிருக பலம் தலை விரித்தாடக் கூடாதென்பதற்காகவே நான் என் சக்தியனைத்தையும் உபயோகித்து நிமிஷத்துக்கு நிமிஷம் பாடுபட்டு வருகிறேன்.

2. மனிதஸ்வபாவம் மிருகஸ்வபாவமாக மாறுவதைத் தடுப்பதிலேயே நான் கண்ணுங் கருத்துமாயிருக்கிறேன்.

3. தங்களை மிருகங்களாக ஆக்கிக் கொள்பவர்கள் தங்கள் கௌரவத்தைத் தாழ்த்திக் கொள்வது மட்டு மன்னியில், மனித சமூகத்தையே இழிவான நிலைக்கு இழுத்துக் கொண்டு வந்து விடுகிறார்கள்.

4. இந்தியா தன் அஹிம்சா சக்தியினால் தான் இங்கிலாந்தின் மிருகஸ்வபாவத்தை மாற்ற வேண்டும்.

5. மிருக சக்தி கொண்ட ஆயுதங்களைவிட கோடிக் கணக்கான பங்கு அதிக சக்தி கொண்டது அன்பு, அஹிம்சை, சத்தியம் என்பதாகும்.

6. எதிராளி அன்பு வழியைக் கடைப்பிடிக்காதவனே யாயினும், பலாத்கார குண மிகுந்தவனே யாயினும், நாம்

மட்டும் உண்மையான அன்பு காட்டுவதில் தவராதிருந்தால் கடைசியில் சச்சரவுகளெல்லாம் மறைந்து போகுமென்பதில் ஐயமில்லை.

7. அஹிம்சையைப் பின்பற்றினால் அராஜகம் ஏற்பட முடியாது. வெளி ஆக்கிரமிப்பை சமாளிக்க ஆயுதங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரச்னையும் எழாது.

8. வகுப்புக் கலகங்கள், கொள்ளைகள், வாய்ச் சண்டைகள், முதலியவைகள் நடக்கும் சமயங்களில் உண்மையில் அஹிம்சையைப் பின்பற்றினால் நிலைமையை சமாளித்து நன்மையடைய முடியும்.

9. உலகம் யுத்த காலத்திலிருந்து விடுபட வேண்டுமானால் மிருக பலத்தை ஒழிக்க வேண்டும்

10. குழப்பம், கோபம், துவேஷம், கலகம் ஆகியவைகளால் நாட்டில் அமைதி ஏற்படாது.

62. ராஜியக் கொலைகள்.

1. ஆட்சி முறையைக் கொலை செய்ய வேண்டுமேயன்றி நிர்க்கதியான நிலைமையிலுள்ள நிர்வாகிகளைக் கொலைப் புரிவதில் பயனொன்றுமில்லை.

2. செல்வாக்கு வாய்ந்த ஒரு கூட்டத்தினர் இந்தியாவில் சுரண்டிக் கொண்டிருக்கும்போது தெய்வ தூதனை உத்யோகஸ்தனாக நியமித்தாலும் அதிகாரத்தையொட்டியே நடந்துக் கொள்வான்.

3. ஏற்கனவே பல கொலைகள் இங்கு நடந்திருக்கின்றன. கொல்லப்பட்டவருக்குப் பதிலாக இன்னொருவர் நியமிக்கப்பட்டு ஆட்சிமுறை எப்போதும் போலவே நடந்துக் கொண்டுதானிருக்கிறது.

4. மனிதர்களைக் கொலை செய்வதால் இந்த ஆட்சி முறையின் ஆயுள்காலம் வளர்ந்து விடுகிறது. அஹிம்சைப் போர் அதனுடைய ஆயுளைக் குறைக்கிறது.

5. அழித்தல் என்னும் தர்மத்தினால் அதர்மம் ஏற்படுகின்றது.

6. தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் கொல்லுவதில் சந்தோஷ மடையும் வாலிபர்கள் தங்கள் கொள்கைகளுக்கே தீங்கிழைத்துக் கொள்கிறார்கள்.

7. அஹிம்ஸா இயக்கத்துக்கு ஹிம்சை செயல்கள் உதவ முடியவே முடியாது.

8 ஒவ்வொரு ராஜீய பலாத்காரச் செயலும் இந்த அஹிம்ஸா இயக்கத்தையே கெடுத்து விடுகின்றன.

63. தொழிலாளர்கள்.

1. தொழிலாளரது குறைகளும், அவற்றை நிவர்த்தித்துக்கொள்ள அவர்கள் அனுஷ்டிக்கும் வழியும் நியாயமானதாகவும், தெளிவாகவுமிருக்க வேண்டும்.

2. முதலாளிகளின் நிலைமையை அனுகூலப் படுத்திக் கொள்ளும் எண்ணத்துடன் செய்யப்படும் காரியங்கள் நியாயமற்றவை.

3. ஹிம்சையில் இறங்காமல் நியாயத்தை நிலை நாட்டு வதும், மத்தியஸ்த சபைகள் மூலமாக முதலாளிகளின் நற் குணத்தை உபயோகித்துக் காரியங்களைச் செய்யும்படி முயல் வதும் நியாயமான மார்க்கங்களாகும்.

4. தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறை வேற்றிக் கொள்ளுவதற்காகத் தங்களுக்குள் சங்கங்களை ஏற் படுத்திக் கொள்ள வேண்டும்.

5. வேலை நிறுத்தங்களை அனுஷ்டிக்காமல் காரியத்தைச் சாதித்துக் கொள்ள எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு முயல்வதே சரியானது.

6. அதிகப்பட்டக் கூலியை கள்ளுக்கடையிலும், குறைவுபட்ட நேரத்தை சூதாட்டக் கடையிலும் ஒரு தொழிலாளி செலவழிப்பானேல் அது எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதையே யொக்கும்.

7. தொழிலாளியின் சம்பளம் உயர்ந்தால் அத் தொகையை அவன் தன் குழந்தைகளின் கல்விக்காக உப யோகிக்க வேண்டும். வேலை நேரம் குறைந்துவிட்டால் அந் நேரத்தை அவன் தன்னைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ளும் துறைகளில் செலவிட வேண்டும்.

8. "வேலை நிறுத்தம்" தொழிலாளிகளுடைய கடைசி ஆயுதமாக இருக்க வேண்டும்.

9. படிக்கும் சிறு சிறு பையன்களைப் பள்ளிக்கூடங் களினின்றும் பிரித்து வேலைக்கனுப்புவது இந்த தேசத்துக்கே அவமானமாகும்.

10 ஸ்திரீகள் ஆலைகளில் வேலை செய்வதும் நிற்க வேண்டும். வீட்டுக்கு வெளியே சென்று வயிற்றுக்குச் சோறு போடுவதற்காக உழைத்து வேலை செய்ய வேண்டியது ஆணின் கடமையாகும்.

64. முதலாளிகள்.

1. எனக்கு அநேக முதலாளிகள் நண்பர்களாக விருப்பது பற்றியும் அவர்கள் என்னிடம் பயங்கொள்ளாதது பற்றியும் நான் வெட்கம் அடையவில்லை.

2. தீவிரமான சோஷலிஸ்ட் அல்லது கம்யூனிஸ்ட் போலவே நானும் முதலாளித்வம் மறை வேண்டுமென்று விரும்புவது அம் முதலாளிகளுக்குத் தெரியும்

3. ஆனால் முறைகளில் வித்தியாச முண்டு பாஷையில் வித்தியாச முண்டு. முதலாளிகள் டிரஸ்டியாக யிருத்தலென்ற எனது சித்தாந்தத்தில் மூடு மந்திரமில்லை.

4. முதலாளித்வத்தில் இதர சித்தாந்தங்கள் மறைந்த போதிலும், இந்த சித்தாந்தம் மறையாதென்பதே எனது நம்பிக்கை.

5. இதற்கு மதம், தத்துவம் இவைகளின் ஆதரவு இருக்கிறது.

6 செல்வம் படைத்தவர்கள் அச்சித்தாந்தத்தின் படி நடக்கவில்லையென்றால் அச்சித்தாந்தமே பொய் என்பதாகாது செல்வந்தர்கள் பலவீனமே வெளியாகிறது

7. அஹிம்சா முறை என்பதில் தவறு செய்யும் தனவந்தர் தவறுக்குப்பரிகாரந்தேடாவிட்டால் தாமே தண்டித்துக் கொள்ள நேரிடும்.

8. அஹிம்சா ஒத்துழையாமையால் அவர் தமது தவறை உணரும்படி செய்யப்படுகிறார். அவருக்கு எவரது ஒத்துழைப்புமில்லாது அவர் முற்றிலும் தனிப்பட்டு விடுகிறார்.

9. ஆகவே புத்திசாலிகளான சோஷலிஸ்டுகளும், இடது சாரிகளும் என் முறையில் தடையாக நிற்காமலிருப்பது நலம்

10. எனது முறை வெற்றியடைய முடியுமானால் ஏழைகள் சந்தோஷமடையக் கூடுமென்பது அவர்களுக்குத் தெரியும்.

65. இயந்திரம்.

1. தேசங்களை இயந்திர மயமாக்குதல் தான் மனித வர்க்கத்தின் சாபத்தீடாக விருக்கின்றது.

2 ஒரு தேசத்தின் செல்வத்தை இன்னொரு தேசத்தார் சுரண்டுவதென்பது இயந்திரத்தால் தான்.

3. இயந்திரங்களைக் கொண்டு மற்ற தேசங்களை அடிமைப் படுத்திக்கொள்ள முடியும்.

4. இயந்திரங்களால் இங்கிலாந்து முதலான நாடுகள் பாடு திண்டாட்டமாகி வருகின்றதே? பிரம்மாண்டமான இந்தியா இயந்திரங்களால் என்னமாக நன்மையடைய முடியும்?

5. இந்தியா இயந்திர மயமானால் மற்ற தேசங்களின் செல்வத்தைச் சுரண்டுவதில் இறங்க வேண்டும்.

6. மேனாடுகளின் நிலைமையைப் பார்த்தால் இனிமேல் இயந்திர ராஜ்யம் வீழ்ந்து மடிய வேண்டியது தான்.

7. மேனாட்டிலேயே இயந்திரம் குந்திப்போய் விடுமென்றால் இந்தியாவைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

8. அளவுக்கு அதிகமாய் பொருளீட்டும் செயல் மகாமாரி கொள்ளைக்கு ஒப்பாகும்.

9. பெரிய இயந்திரங்கள் செய்து அவற்றை நீராவியாலும், மின்சார சக்தியாலும் இயக்குவது கோடிக்கணக்கான மக்களின் அன்றாட வருமானத்தை விழுங்கி ஏப்பமிடுவதாகும்.

66. பொதுஸ்தாபனம்.

1. பொதுஸ்தாபனங்கள் ஜாக்ரதையுடனிருந்து லோபியைப்போல பொதுப்பணத்தைச் சிலவழிக்க வேண்டும் இல்லாவிடின் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

2. ஒரு ஸ்தாபனத்தினிடம் ஏராளமான நிதிகள் இருப்பதன் காரணமாக, அது எப்படி வேண்டுமானாலும் பணத்தைச் சிலவழித்து விடுவது நியாயமல்ல.

3. அவசியமானபோது வசூலிக்கவோ, சிலவழிக்கவோ தயங்கக்கூடாது. அவசியமில்லாதபோது ஒவ்வொரு பைசாவையும் கெட்டியாய் முடிந்து வைக்க வேண்டும். இதுவே சிறந்த விதி.

4. மாட்டு வண்டியில் நடக்கக்கூடிய காரியத்துக்கு மோட்டார் காரை உபயோகிக்கக்கூடாது காலில் நடந்து செல்லக்கூடிய காரியமாயிருந்தால் மாட்டு வண்டியைக்கூட உபயோகிக்கக்கூடாது.

5. கணக்குகளைக் கவனமாகப் பரிசீலனை செய்தல் வேண்டும்

6. பணத்தை வைத்துக்கொண்டு அல்லது பணமே யில்லாமல் கூட போரை நடத்தக்கூடிய சாமர்த்தியம் நமக் கிருக்க வேண்டும்.

7. ஆண்டவன் மீது பாரத்தை போட்டு விட்டு எதற்கும் அஞ்சாது தீரத்துடன் காரியத்திலிறங்கினால் எல்லாம் நன்மையாகவே முடியும்.

67. விடுமுறையில் மாணவர்களின் வேலை.

1. பகலிலும் இரவிலும் கிராமங்களில் பள்ளிக்கூடங் களை நடத்தலாம். எவ்வளவு நாளைக்கு விடுமுறைக் காலமோ அவ்வளவு காலத்திற்குள் சுருக்கமாகப் பாடங்களை நடத்த வேண்டும்.

2. ஹரிஜனங்களுடைய உதவியைப் பெற்று அவர் களுடைய சேரிகளைச் சுத்தமாகச் செய்து வைக்கலாம்.

3. சேரிக் குழந்தைகளை பக்கத்து கிராமங்களுக்கு அழைத்துக்கொண்டு போய் அடுத்தாற்போலுள்ள ஊர்கள், நதிகள் அவைகளைப்பற்றிய சரித்திரங்கள் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கலாம்.

4. இராமாயணத்திலிருந்தும், மகா பாரதத்தி லிருந்தும் சின்னச் சின்னக் கதைகளை குழந்தைகளுக்குப் படித்துக் காட்டலாம்.

5. சிறியபஜனைப் பாட்டுகளை அவர்களுக்குச் சொல்லி கொடுக்கலாம்.

6. ஏழைக் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்து வைப்பதோடு, பெரியோர்களுக்கும், சிறியோர்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றி சொல்லிக் கொடுக்கலாம்.

7. எந்த எந்த சேரியில் எத்தனை யெத்தனை பேர் குடியிருக்கின்றனர் போன்ற விஷயங்களையும், அவர்கள் வாழ்க்கை எவ்வாறிருக்கின்றன என்பதையும் கணக்கு எடுக்கலாம்.

8. வியாதியால் அவஸ்தைப்படுவோர்களுக்கு மருந்து முதலானவைகள் கொண்டு போய்க் கொடுத்து உதவி செய்யலாம்.

9. இவ்வாறு மாணவர்கள் சமூக ஊழியத்தில் விடு முறையைக் கழிப்பது தேசத்துக்குச் செய்த சிறந்த சேவையாகும்.

68. கிராம ஊழியர்கள்.

1. முதலில் கிராமத்தில் பஞ்சாயத்து அல்லது கிராம ஊழியர்கள் சங்கம் அமைக்க வேண்டும்.

2. தமுக்கு மூலமாக கிராமத்தார்களுக்கு அறிவித்து ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி தேர்தல் மூலம் தக்க நபர்களை தேர்ந்தெடுத்தல் வேண்டும் கிராமச் சச்சரவுகளை இதன் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

3. விவசாய வளர்ச்சிக்கு யோசனை கூற வேண்டும்.

4. சிறுவர், சிறுமியருக்குக்கல்வி கற்பித்தல் வேண்டும்.

5. முதியோர் கல்விக்கு முயற்சித்தல் வேண்டும்.

6. கிராம சுகாதாரத்தை கவனித்தல் வேண்டும்.

7. வைத்திய வசதிகளை வளர்க்க வேண்டும்.

8. தீண்டத்தகாதவரை கை தூக்கி விடுதல் வேண்டும்.

9. நூல் நூற்கவும், நெசவுக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

10. மதுபானப் பழக்கங்களை மறந்து விடும்படி பிரசாரம் செய்தல் வேண்டும்.

69. பஞ்சாயத்துகள்

1. "பஞ்சாயத்து" என்ற மொழியிலேயே பண்டைக் கால மணம் வீசுகின்றது; அது மிகவும் நல்ல வார்த்தை. நல்ல வார்த்தை என்றால் பொருள் நிறைந்த மொழி என அர்த்தம்.

2. ஆதிகாலத்தில் இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் குடியரசு நிலவியிருந்தது.

3. இன்று கிராமக் குடியரசுகளும், பஞ்சாயத்து முறையுமில்லை. இதற்கு காரணம் பிரிட்டிஷ் சர்கார் தான்.

4. பழைய பஞ்சாயத்து முறையை மீண்டும் உயிர்ப்பிக்கக் காங்கிரஸ்காரர்கள் முயற்சிக்க வேண்டும்.

5. விபரீதமான தீர்ப்புகளில்லாமலும், கௌரவமாகவும் ஒழுங்காகவும் சரியான திட்டங்களுடனும் நடத்தப் படா விடில் பஞ்சாயத்தின் முயற்சி வீணாய்விடும்.

6. பஞ்சாயத்து தனது ஒழுங்கான வேலைக் காரணமாக பொதுஜன ஆதரவைப் பெருக்கிக் கொண்டால், அதன் காரணமாக அதன் தீர்ப்புகளுக்கும், அதிகாரத்துக்கும் ஜனங்கள் கீழ்ப்படிந்து நடப்பர்.

70. உண்மைச் சேவை.

1. இந்தியாவுக்கு ஊழியம் புரிய விரும்புகிறவர்கள் உண்மையாகச் சேவை செய்யும் சக்தியையும், விருப்பத்தையும் வளர்க்க வேண்டும்

2. உண்மையாகச் சேவை புரிய வேண்டுமென்ற எண்ணம் நம்மிடம் இல்லாமலிருந்தால் தான் நமக்குள் பகைமையும், அதிருப்தியும் பெருகும்.

3. பின் வரிசையிலிருந்தாலும் நிதான மனதுடன் தன் வேலையைச் செய்பவனே உண்மையானத் தொண்டன்.

4. உண்மைத் தொண்டு அளவைப் பொருத்ததல்ல அது எவ்வளவு அடக்கமாகச் செய்யப்படுகின்றதோ அவ்வளவுக்கு உயர்ந்தது.

5. தொண்டர்கள் சாந்தத்தை அஸ்திவாரமாகக் கொண்டு வேலை செய்வதோடு அதிகமான அடக்கத்தை வளர்க்க வேண்டும்.

6. தங்கள் வேலையை மற்றவர்கள் மெச்சவில்லையே அல்லது பாராட்டவில்லையே என்ற காரணத்துக்காக அவர்

கள் தங்கள் முயற்சியைக் குறைத்துக்கொள்ளவோ அல்லது யோக்கிய முறைகளினின்றும் நழுவி விடவோ கூடாது.

7. இந்தியாவுக்குச் சேவை செய்வதன் மூலம் நாம் உலகிற்குச் சேவை செய்யலாம்.

8. முதலில் இந்தியாவுக்கும் முடிவில் உலகிற்கும் சேவை செய்ய நாம் பெற்றுள்ள திறமையைப் பலப்படுத்திக் கொள்ள இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும்.

71. தியாக வாழ்வு

1. தியாகம் நிறைந்த ஒரு வாழ்வு ஆண்டவன் சிருஷ்டியின் அற்புதத்தைக் காட்டுகின்றது.

2. ஒருவன் வாழ்கிறான் என்று நாம் சொன்னால், பிறர்க்குதவி செய்து வாழ்தலையே அது குறிக்க வேண்டும். சுயநல வாழ்வு வாழ்வாகாது.

3. கடவுள் ஒரு எலும்புக் கூட்டிற்குள் ஒரு ஆத்மாவைப் புகுத்தி அதை எதற்காக இவ்வுலகிற்கு அனுப்பினார்? தியாக வாழ்வு நடத்தவே.

4. தியாக உணர்ச்சி நிறைந்தவன் தியாகம் செய்வதில் சளைக்கமாட்டான்.

5. "ஐயோ" இவ்வளவு கஷ்டமான தியாகம் செய்ய வேண்டியிருக்கிறதே, என்ன செய்வது, என்று மன வெறுப்புடன் ஒருவன் தியாகம் செய்யத் தொடங்கினால் அது தியாகமே யாகாது.

6. உலக பந்தங்களினின்றும் சிறிது சிறிதாக விடு பட்டு தியாகத்தை மேற்கொள்ளுபவன் மோக்ஷ சாம் ராஜ்யத்தை அடைகின்முன்.

7. உலக மக்களுக்காக உழைப்பவன் தன்னுடைய சொந்த சௌகர்யங்களைப் பற்றி வெலேசமும் சிந்திக்க மாட்டான்.

8. உத்தம தியாகியின் உள்ளம் களங்க மற்றதாயிருக் கும், அவனிடம் சாந்தம் நிலவும், கோபத்தை வென்றவனு யிருப்பான்.

9. தியாகி அசௌகர்யங்கள் ஏற்பட்டாலும் அவன் மனச்சஞ்சலமடையான். அவன் உழைப்புத்தான் அவனுக்குக் கூலி.

10. தியாகம் செய்யச் செய்ய, மேலும், மேலும் தியாகம் செய்யும்படியான சக்தி அவனிடம் ஊற்று போல் பெருகிக்கொண்டே யிருக்கும்.

72. யுத்தம்.

1. யுத்தம் என்கிற கௌரவப் பெயர் வழங்கும் இந்த உணர்வற்ற படுகொலையை அடுத்து புது உலக அமைப்பு ஏற்படத்தான் போகிறது.

2. ஐரோப்பாவில் தற்போது நடக்கும் யுத்தம் காட்டு மிராண்டித் தனமான சண்டையாகும்.

3. வெடி மருந்துகளைக் கண்டு பிடிக்கும் யுத்தப் போக் கால் தங்களுடைய புத்தியை விற்றுவிட்டார்கள் என்று கூற வேண்டியிருக்கிறது.

4. காட்டுமிராண்டித் தனமான யுத்தத்தில் மூழ்கி யிருப்பதை விட்டு மனுஷ்யர்களின் சந்தோஷத்திற்கும், சமாதானத்திற்கும் உழைப்பதில் மூளையைச் செலவிடுவது தான் சரியான வழியாகும்.

5. ஐரோப்பியரின் வீரத்தை நான் வியந்து பாராட்டு கிறேன். ஆனால் அவர்கள் வீரத்தின் பிரயோஜனம் என்ன? நான் அவர்களது முட்டாள் தனம் பற்றியும், அஞ்ஞானம் பற்றியும் பச்சாத்தாபப் படுகிறேன்.

73. பிறந்த நாள்.

1. எனது பிறந்த நாள் கொண்டாட்டம் நான் விரும்ப வில்லை.

2. லண்டன் பரிக்ஷைக்காக எனது பிறந்த தின அத்தாக்ஷி எடுக்க நேரிட்டதால் நான் பிறந்த தினம் எனக்கு ஞாபகத்திலிருக்கிறது.

3. ஆனால் கதர் இயக்கம் தோன்று முன்பு நான் என் பிறந்த தினத்தை நினைத்ததே யில்லை

4. கதர் விற்பனை தான் எனது பிறந்த தினக் கொண் டாட்ட விழாவாகும்.

5. நான் பூர்த்தி செய்யினும், செய்யாவிடினும் தேதி கள் முறையே தவறாது வந்து எனது வயதைப் பூர்த்தி செய்து விடுகின்றன.

6 எனது பிறந்த தின விழாவைப் பொதுமக்கள் அறிய விரும்பினால் அரைவயிற்றுக்குக்கூட கஞ்சிகிடைக்காதுவாடும்

கிராமவாசிகளால் உற்பத்தி செய்யும் கதரை எல்லோரும் வாங்கி ஏழை மக்களைக் காப்பாற்ற முன் வருகிறார்கள் என்று நான் நினைத்தால் மாத்திரம் என் ஆன்மா பரவசமடையும் என்பதை அறிய வேண்டுகிறேன்.

7. யுத்தத்தைச் சாக்காகக்கொண்டு கதரை வாங்காது யாரும் தப்பிக்க எண்ணக்கூடாது.

8. யுத்தமோ யுத்தமில்லையோ நம் உடலில் உயிருள்ள வரை நமக்கு உணவும் ஆடையும் இன்றியமையாததே

74. உபவாசம்.

1. உபவாசம் ஆத்மசுத்தி செய்யும் நடவடிக்கை யாகும்.

2. உபவாச தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் ஆத்ம சுத்தியின் பொருட்டு உபவாச மேற்கொள்ளலாம்.

3. எனது அந்தராத்மா ஆக்ஞையிடும் போது நான் உபவாசம் மேற்கொள்ளுகின்றேன்.

4. உபவாசத்தின் மூலமும், பிரார்த்தனை மூலமும் எனக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைப்போல் வேறுயெவருக்கும் பலன் கிடைத்திருக்காது என்று நம்புகிறேன்.

5. எனது உபவாச அனுபவத்தை தேசத்திற்குப் பயன் படுத்த விரும்புகிறேன்.

6 உபவாச மிருப்பதாலும், பிரார்த்தனைகள் செய்வதாலும் ஆத்ம சக்தி ஏற்படுகிறது.

7. நம் லக்ஷியங்கள் நிறைவேற ஊர்வலங்கள், கொடியேற்று விழாக்கள், கூட்டங்கள் முதலியவைகளை விட உண்ணு விரதமே முக்கியமானதாகும்.

8. வாரத்தில் ஒரு நாளாவது மௌனமாயிருப்பது எனக்கு நன்மை தருவதாயிருக்கின்றது.

9 ஒவ்வொருவரும் நாள் முழுவதும் மௌனமாகயிருந்து தம்மை ஆராயமுடியுமானல் எவ்வளவு நன்மையுண்டாகும்?

10. ஆன்ம பயிற்சியைச் செய்ய மக்கள் பழக வேண்டும்.

75. விவசாய வளர்ச்சி.

1. கிராமக் கைத்தொழில்களின் அஸ்திவாரம் விவசாயமேயாகும்

2. பல வருஷங்களுக்கு முன் ஒரு காவியம் படித்தேன். அதில் விவசாயியை உலகத்தின் தந்தையாக வர்ணித்திருந்தது.

3. கடவுள்தான் தருபவர். ஆனல் விவசாயியே அவருடைய கை.

4. நாம் கைகளை உபயோகிக்க மறந்துவிடும் அபாய நிலைமையில் இருந்து வருகின்றோம். நிலத்தை வெட்டித் திருத்திப் பயிர் செய்ய மறந்துவிட்டால் அது நம்மையே மறந்து விடுவதாகும்.

5. சீக்கிரமாகப் பெருத்த மாசூல் கிடைக்கும்படியாக நிலத்தின் செழுமையை பயன்படுத்த ஆரம்பிப்பது கேடு விளைப்பதாகும்.

6. அது நீண்ட நாள் பலன் தரும் திட்டமன்று. நிலம் செழுமையை இழந்துவிடுவதற்கான யோசனையே அது.

7. உயிர் தரும் உணவு வேண்டுமா? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழையுங்கள். என்றே நிலம் என்னும் நல்லாள் கூறுகின்றாள்.

8 தாமதமாகப் பயன் தருவதாயினும் அதுதான் நிலத்துக்கும், நிலத்தில் வாழும் மக்களுக்கும் க்ஷேமம் தரும் என்று உறுதி கூறுகிறேன்.

9. இதுவரை நாம் நெற்றி வேர்வை நிலத்தில் விழச் செய்த உழைப்பின் பயனையே அனுபவித்து வருகின்றோம்.

10. ஆரோக்கியம் தருவதும் போஷணை உள்ளதுமான உணவே கிராமவாசிகளின் பொருளாதாரத்தின் ஆதியும் அந்தமுமாகும்

76. சுதந்திர இந்தியா.

1. என்றைக்கு ஒவ்வொரு வீடும் கோட்டையாக ஆகின்றதோ அன்றைக்குத்தான் இந்தியா உண்மையான சுதந்திரத்தைப் பெற்றதாகும்.

2. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களிடம் துவேஷம் கொள்ளாமலிருக்கிறோமோ அப்பொழுதுதான் நமக்கு நாமே போலீஸ்காரராக இருக்கக் கற்றுக் கொள்ள முடியும்.

3. ஒவ்வொருவரும் பிறரிடம் துவேஷம் பாராட்டாமல் உயிர் விடக்கூடிய உத்தம வித்தையை கற்றுக்கொள்ள வேண்டும்.

4. நாம் வெகுகாலமாக கஷ்டப்பட்டுத் தேடியுள்ள சுயராஜ்யத்தைச் சரியாக நிர்வகிப்பதற்கு நமக்கு வேண்டியது யாது? பரிபூர்ணமான அடக்கமும் சுயநலமின்மையும்தான்.

5. நீங்கள் கட்டுப்பாடான முறையில் நடந்துக் கொண்டால் சுதந்திர இந்தியா வாழும். இல்லையேல் சாகும். நீங்கள் தலை நிமிர முடியாது போவீர்கள்.

6. சுதந்திர இந்தியா கஷ்டப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் உலகத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமையைச் சரிவர நிறைவேற்றுவதற்குள்ள ஒரே மார்க்கம் எளிய முறையில் உன்னதமான லக்ஷியங்களோடு வாழும் படியாகச் செய்வதுதான்.

7. கிராமங்கள் ஒவ்வொன்றும் சகல அதிகாரங்களுடைய பஞ்சாயத்தாகிய குடியரசாக இருத்தல் வேண்டும்.

8. நான் விரும்பும் சுதந்திர இந்தியாவில் எல்லா மதங்களும் சரிசமானமான அந்தஸ்து உடையதாயிருக்கும்

9. என்னுடைய சுதந்திர இந்தியாவில் மனிதனை வேலை செய்யாமல் செய்வதும், அதிகாரங்களைச் சிலரிடமே இருக்கும்படிச் செய்வதுமான மெஷின்களுக்கு இடங் கிடையாது.

10. சகல மக்களுக்கும் உபயோகமான மெஷின்கள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு.

77. எனது முடிவு.

1. கடவுள் எனக்கு சக்தியளித்திருப்பாரானுல் நான் எடுத்துக்கொண்ட காரியத்தில் வெற்றியடைவேன். அல்லது உயிர் துறப்பேன்.

2. நான் இறப்பது பீகாரிலோ, சேவாகிராமத்திலோ, குஜராத்திலோ, டெல்லியிலோ எங்கு நிகழ்ந்தாலும் எனக்கு எல்லாம் ஒரே மாதிரிதான்.

3. எனது உடலை சுடாமல் புதைத்தாலும் நான் வருந்த மாட்டேன். மண் மண்ணேடு சேர வேண்டியது தானே.

4. பற்றற்றவர்கள் மரணத்துக்குப்பின் என்ன நிலை என்று அறியக்கவலைப்பட மாட்டார்கள். அத்தகைய ஆசை உண்டாவதுகூடத் தவறேயாகும்.

5. என்னைப்போல் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து போகலாம். ஆனுல் அஹிம்சா தர்மம் மட்டும் ஒரு நாளும் இறந்து போகாது.

6. 125 வயது வரை வாழலாம் என்ற நம்பிக்கையை நான் அடியோடு இழந்து விட்டேன்.

7. என் நம்பிக்கைக் குலைந்ததற்கு இந்த உலகத்தில் நடக்கும் பயங்கரச் சம்பவங்கள் தான் காரணம்.

8. இருளிலே உழல நான் விரும்பவில்லை.

78. ராமநாமம்.

1. உலகத்தில் சகல சக்திகளிலும் எது உயர்ந்ததோ அந்த அழிக்கமுடியாத சக்திக்குப் பெயரிடமுயன்றுதான் மனிதன் "ராமன் என்றும், ரஹ்மான் என்றும், அஹுர் பஜ்தா என்றும், கர்த்தர்" என்றும் அழைக்கின்றான்

2. ராமனை ஆளாக எண்ணிப் பிரார்த்தனை செய்தாலும், சக்தியாக எண்ணிப்பிரார்த்தனை செய்தாலும் ஒன்றுதான்.

3. இராமநாமம் கடவுளுக்குறிய பல நாமங்களில் ஒன்று

4. கோடிக்கணக்கான இந்துக்கள் சர்வ வியாபியான கடவுளுக்கு ராமநாமத்தைச் சூட்டியிருக்கின்றார்கள்.

5. இராமநாமம் என்பது வாயால்மட்டும் பஜிக்கும் பஜனையன்று.

6. ராமநாமத்தில் நாமம் என்னும் பகுதிதான் அர்த்த புஷ்டியுள்ள பகுதியாகும்.

7. ராமநாமத்தில் காணப்படும் ராமன் சரித்திரத்தில் காணப்படும் ராமன் அல்லன்.

8. ராமநாமத்தை மனத்தாலும் பஜிக்க வேண்டும்' அதனால் மன அடக்கமும், கட்டுப்பாடும் எளிதில் உண்டாய் விடும்.

9. ராம ராஜ்யம் என்று குறிக்கும் விஷயத்தை முஸ்லீம்களிடத்தில் குதாய்ராஜ்யம் என்றும், கிறிஸ்தவர்களிடத்தில் கர்த்தர் ராஜ்யம் என்றும் கூறுவேன்.

10. ஹா ராம்! ஹா ராம்!! ....?